

# இது சதி வேளை

Rajesh Kumar

## ராஜேஷ்குமார்



### 1

**OUR NAVY IS REPORTED TO BE AMONG THE TOP TEN IN THE WORLD**

மழைக்கால சென்னை. சென்ட்ரல் ஸ்டேஷனின் கிளாக் டவரில் ராத்திரி 11.30 தலைக்கு மேலே அழுமூஞ்சி ஆகாயம் - செமத்தியான ஒரு மழைக்குப் பின் - லேசாய் தூறல் போட்டுக் கொண்டிருந்தது. சென்னையில் சாலைகள் - ஆட்கள் இல்லாமல் - வாகனங்கள் இல்லாமல் அநேகமாய் பாலைவனம். சினிமா தியேட்டர்களின் முகப்புகளில் - ஐம்பதடி உயர பிளாஸ்டிக் கட் அவுட்களில் இன்றைய முன்னணி

க்தாநாயகர்கள் நனைந்து கொண்டிருந்தார்கள். வேர்க் கடலை வண்டிக்காரன் இடது கையில் ஒரு சிதிலமான குடையைப் பிடித்துக் கொண்டு -வாணலியை வதக்க - பஸ் ஸ்டாப் ஷெல்டர்களுக்கு கீழே - மாடுகள் தஞ்சாவூர் நந்தி போஸில் உட்கார்ந்து அசை போட்டன. பாலிதீன் பேப்பரை தலைக்கு சுற்றிக் கொண்ட இரண்டு ரிக்ஷாக்காரர்கள் ஒரு நடிகையின் கற்பை சேதப்படுத்துகிற வகையில் பேசிக் கொண்டே போனார்கள்.

பாலாஜி - கடற்கரைச் சாலையில் - ஒரு மரத்துக்கு கீழே சிகரெட் புகையோடு காத்திருந்தான். முப்பது வயது. மழையில் நனைந்த தலை. செழிப்பான மீசை. பார்வை அடிக்கடி - ரோட்டின் வலது பக்கம் போய்விட்டு திரும்பியது.

'எந்த நிமிஷமும் அவர்கள் வந்து விடலாம்'

சிகரெட்டின் கடைசி சென்டி மீட்டரை ரோட்டோரம் தேங்கியிருந்த மழைத் தண்ணீரில் வீசிவிட்டு இடது பக்கமாய் திரும்பியவன் - தனக்குப் பக்கத்தில் நின்றிருந்த அந்தப் பெண்ணைப் பார்த்ததும் திடுக்கிட்டான்.

தொழில்காரி.

"இன்னாய்யா... ஒதுங்கலாமா..?"

"வேற ஆளைப் பாரு."

"என்கிட்ட நோவு கெடையாது... நூறு ருபா தான்."



"ச்சீ... போ..."

"ரேட் ஜாஸ்தின்னு தோணுதா...? குறைச்சுக்க ஸார்"

"இப்ப... நீ போகப் போறியா இல்லையா...?"

"இஷ்டமானதை குடுய்யா..." மட்டமான பௌடரும் - மல்லிகைப் பூவும் மணக்க - பாலாஜியின் மேல் வந்து மோதினாள்.

பாலாஜி தன் இடுப்பில் கைவைத்து எதையோ உருவி ப்ளக் என்றான். இருட்டில் அந்த கத்தி மின்னியது.

"யோ...வ்...!"

அவள் மிரண்டு பின்வாங்க - பாலாஜி உறுமினான். "போயிரு இல்லே... சொருகிடுவேன்..."

அவள் தூறுகிற மழையை பொருட் படுத்தாமல் ஓடினாள். ஓடும்போதே கெட்ட வார்த்தைகளை பயன்படுத்தி இருட்டில் மறைந்தாள். பாலாஜி கத்தியை மடக்கி இடுப்பில் மறுபடியும் சொருகிக் கொண்டபோது -

அந்தக் கார் மழை நீரை வாரியிறைத்துக் கொண்டு - அவனுக்குப் பக்கத்தில் வந்துநின்றது. டிரைவிங் சீட்டில் இருந்த இளைஞன் - காரின் பின் பக்க கதவைத் திறந்து விட்டபடி "பாலாஜி! கெட் இன்..." என்றான்.

பாலாஜி மரத்துக் கீழே இருந்து வெளிப்பட்டு கார்க்குள் நுழைந்து

கதவைச் சாத்திக் கொள்ள கார் புறப்பட்டது. ட்ரைவிங் சீட் இளைஞனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த சல்வார் கம்மீஸ் அணிந்திருந்த அந்தப் பெண் பாலாஜியைத் திரும்பிப், பார்த்து கேட்டாள்.

"வந்து நேரமாச்சா..?"

"இல்லேம்மா... இப்பத்தான் வந்தேன்.."

"யார்கூட பேசிட்டிருந்தே...? கார்ல வரும் போது பார்த்தோம்.."

"அவ ஒரு தொழில்காரி.. நான் தனியா நின்னுட்டிருந்ததைப் பார்த்ததும் பேரம் பேச வந்துட்டா... கத்தியை எடுத்து காட்டினதும்.. ஓடிட்டா.."

ட்ரைவிங் சீட் இளைஞன் சிரித்தான்.

"வர வர மெரினா பீச் நாறிப் போச்சு.. பேசாமே இந்த ஏரியாவை பம்பாயில் இருக்கிற மாதிரி.. ரெட் லைட் ஏரியாவா மாத்திடலாம்..." அந்தப் பெண் குறுக்கிட்டாள். "சுபாஷ்! அந்தப் பேச்சை விடு..! பாலாஜி கிட்டே நம்ம விஷயத்தைப் பேசு.."

சுபாஷ் ஒரு ரோட்டின் வளைவில் திரும்பிக் கொண்டே கேட்டான். "பாலாஜி! ஷிப் காப்டன்கிட்டே எல்லாத்தையும் பேசிட்டியா?"

"பேசிட்டேன் ஸார்.."

"நான் அவர்கிட்ட என்ன பேசணும்..?"



"குடுக்க வேண்டிய தொகையை கன்ஃபார்ம் பண்ணிக்குங்க ஸார்.. டெர்ம்ஸ் அண்ட் கண்டிஷனை... என்கிட்ட சொன்ன மாதிரியே.. அவர்கிட்டேயும் சொல்லிடுங்க."

"கோ-காப்டனும் இருப்பாரா?"

"கண்டிப்பா இருப்பார்.."

"காப்டன், கோ-காப்டன் இவங்க பேர் என்னான்னு சொன்னே?"

"காப்டன் தங்கராஜ், கோ-காப்டன் ஜெகதீஷ். ரெண்டு பேருமே தமிழ்நாட்டைச் சேர்ந்தவங்கதான்... நேட்டிவ் ப்ளேஸ் மெட்ராஸ்தான்.."

துறைமுகத்தையொட்டி போன ரோட்டில் கார் நுழைந்தது. ஷிப்பிங் கார்ப்பரேஷன் கட்டிடங்கள் - சாத்திய ஷட்டர்களோடும், ஜன்னல்களோடும் - வந்தது. மழை இன்னமும் நமநமவென்று பெய்து கொண்டிருக்க காரின் வைப்பர்கள் மூன் கண்ணாடியில் நீரை வழித்து போட்டன. தொலைதூரக் கடலில் இரண்டொரு கப்பல்கள் சின்னச் சின்ன வெளிச்சப் பொட்டுக்களோடு அசைந்தன.

"பாலாஜி!"

"ஸார்.."

"காப்டனும், உதவி காப்டனும்... கடைசி நேரத்துல... கஸ்டம் ஆபீஸர்ஸ்கிட்டே எங்களை காட்டி குடுத்துட மாட்டாங்களே..?"

பாலாஜி சிரித்தான். "ஏன் ஸார்..

இப்படி பயப்படறீங்க? காப்டன் தங்கராஜூம் சரி... கோ-காப்டன் ஜெகதீஷூம் சரி... சொன்னா... சொன்ன வார்த்தையை காப்பாத்த நினைக்கறவங்க... எனக்கு அவங்களைப் பத்தி நல்லாவே... தெரியும் ஸார்... நீங்க போட்டிருக்கிற திட்டத்துக்கு பரிபூர்ணமா உதவுவாங்க..."

"ஸீ-மென் குவார்ட்டர்ஸூக்கு எப்படி திரும்பணும்..? லெஃப்ட்டா... ரைட்டா...?"

"ரைட்... ஸார்."

"மழையில் நனைந்த அமைதியான கரன்க்ரீட் ரோடு. ஒட்டடை அடைத்த மாதிரி கழல் விளக்ககளின் வெளிச்சம். ரோட்டோரத்தில் குத்துச் செடிகள். ஓடுகள் வேய்ந்த ஒரே மாதிரியான விடுகள். "SEA MEN QUARTERS' பெயர்ப்பலகை காரின் வெளிச்சத்தில் தெரிந்தது.

"குவார்ட்டர்ஸ் நெம்பர்... ஃபோர்டீன்தானே?"

"ஆமா... ஸார்..."

கார் வீடுகளை மோப்பம் பிடித்துக் கொண்டு போயிற்று.

வீட்டு எண் 14- வந்தது.

காரின் என்ஜின் ஓய்ந்தது.

பாலாஜி முதல் ஆளாய் இறங்கி - சிறிய காம்பௌண்ட் கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே போய் காலிங் பெல்லுக்கு வேலை கொடுத்தான்.

கதவு உடனே திறந்தது.

நைட் கவுனில் தங்கராஜ் நின்றிருந்தார்.



நடுத்தர வயது. உயரம்; சிவப்பு. வழுக்கைநரையும் கறுப்பும் கலந்த மீசை.

"என்ன பாலாஜி..?"

"அவங்க வந்துட்டாங்க... ஸார்..."

"அண்ணன், தங்கச்சி ரெண்டு பேருமே வந்திருக்காங்களா?"

"ஆமா... ஸார்."

தங்கராஜ் வாசலுக்கு வந்து எட்டிப் பார்த்து - குரல் கொடுத்தார் "வாங்க... மிஸ்டர் சுபாஷ் அண்ட் மிஸ் பிரபலா."

இருவரும் உள்ளே வந்தார்கள். ஹாலில் ஒரு ரூம் லைட் மஞ்சளாய் ஒளிர்ந்து கொண்டிருந்தது. சோபாவில் கோ-காப்டன் ஜெகதீஷ் சாய்ந்து உட்கார்ந்து சிகரெட் ஒன்றை பிடித்துக் கொண்டிருந்தார். பார்த்ததும் பரஸ்பரம் கைகளை குலுக்கிக் கொண்டார்கள். உட்கார்ந்தார்கள்.

தங்கராஜ் சொன்னார்.

"அரைமணி நேரத்திற்குள் நீங்க பேச வேண்டியதை பேசிட்டு உடனே புறப்பட்டுடணும்... ஏன்னா ஷிப் யார்டில்... நைட் ஷிஃப்ட் முடிஞ்சு... பனிரெண்டு மணிக்கெல்லாம் ஆட்கள்... வர ஆரம்பிச்சுடுவாங்க..."

சுபாஷ் சோபாவின் நுனிக்கு வந்தான். "பாலாஜி உங்ககிட்டே எல்லாத்தையும் சொல்லியிருக்கலாம்... இருந்தாலும்... உங்களையும் கோ-காப்டனையும் நேர்ல பார்த்து... பேசணும்ங்கிற

ஃபார்மாலிடிக்காகத்தான் வந்தேன்..”

“தட்ஸ் குட்..! ஏதாவது ஹாட்டா சாப்பிடறீங்களா?”

“தாங்க்ஸ்! வேண்டாம்..”

கோ-காப்டன் ஜெகதீஷ் தன் கையிலிருந்த சிகரெட்டை ஆஷ்ட்ரேயில் அழுத்திவிட்டு சுபாஷிடம் நிமிர்ந்தார்.

“இந்த திட்டத்தில் எனக்கு சில டவுட்ஸ்..?”

“என்ன..?”

“கோல்ட் பிஸ்கெட்ஸ், மொத்தம் ஐம்பது கிலோ கொண்டு வரப்போறீங்க.. இல்லையா?”

“ஆமா..”

“கஸ்டம்ஸுக்கு தெரியாமே - அதை எப்படி கப்பலுக்கு கொண்டுவரப் போறீங்கங்கிறதை ஒரு தடவை விளக்கமா சொல்ல முடியுமா..?”

சுபாஷ் மெல்லிய குரலில் சொன்னான், “கப்பல் நாளைக்கு ராத்திரி.. பத்து மணிக்கு மெட்ராஸ் போர்ட்டை விட்டு புறப்பட்டதும் - அரைமணி நேரம் கழிச்சு.. என்னோட ஆட்கள் ரெண்டுபேர் ஸ்டீம் போட்ல - நடுக்கடலுக்கு வந்து - கப்பலை எதிர் கொள்வாங்க.. ஸ்டீம் போட்ல இருக்கிற தங்கத்தை நாங்க உங்க உதவியோடு காபினுக்கு கொண்டு போயிட்றோம்.. அவ்வளவுதான்..”

“இந்த திட்டம் எனக்கு அவ்வளவு உசிதமா படலை... ஏன்னா கடற்படை



ரோந்து போலீஸார் இப்பல்லாம் ரொம்பவும் உஷாராயிருக்காங்க.. மாட்டிக்கிட்டா வம்பாயிடும்.

பிரபலா குறுக்கிட்டு புன்னகைத்தாள். “மாட்டிக்காமே வரவேண்டியது எங்க ஆட்களோட பொறுப்பு போதுமா ஸார்..?”

“உங்க ரெண்டு பேரோட துணிச்சல் எங்களுக்கு ஆச்சர்யமாயிருக்கு. அதே நேரத்தில் பயமாவும் இருக்கு. உங்களுக்கு உதவப் போகிற எங்களுக்கு கிலோ பத்து லட்ச ரூபாய்... ஒரு கிலோ கோல்ட் பிஸ்கெட்ஸ் தர்றதா சொல்லியிருக்கீங்க.. இருந்தாலும்.. ஒரு வேண்டுகோள்..”

“என்ன..?”

“ஒருவேளை நீங்க.. கடற்படை போலீஸ்கிட்டே மாட்டிக்கிட்டா எங்க ரெண்டு பேரை, காட்டி கொடுக்கக்கூடாது..”

“மாட்டோம்..”

“அப்புறம்.. ‘ஷிப்’ல ஷிப் ஊழியர்களையும் சேர்த்து மொத்தம் நூத்தி முப்பத்தியோர் பேர் இருப்பாங்க. இவங்கள்ல யார்க்கும் எந்த சந்தேகமும் வராதபடி நீங்க ரெண்டு பேரும் நடந்துக்கணும்.. ஷிப் சிங்கப்பூர் போய்ச் சேர்க்கிற வரைக்கும்.. எங்கக்கிட்டே நீங்க எந்தவிதமான பேச்சு வார்த்தையும் வெச்சுக்கக்கூடாது.. உங்களுக்கும் எங்களுக்கும் எந்த நெருக்கமும் இருக்கிற மாதிரி காட்டிக்கக் கூடாது..”

"இட்ஸ்.. ஓ.. கே.."

"இன்னொரு விஷயம்.."

தங்கராஜ் குறுக்கிட்டார்.

"எஸ்.."

"ஷிப்பில் திடீர்னு ஸ்க்வாட் வரலாம்... அப்படி வர்றப்ப கோல்ட் பிஸ்கெட்ஸை.. பாதுகாக்க வேண்டியது உங்க பொறுப்பு.."

"நாங்க பார்த்துக்கிறோம்.."

உங்க திட்டப்படி... ஷிப்.. சிங்கப்பூர் போர்ட் போய் சேர்றதுக்கு முந்தி பேர்ரன் ஐலேண்ட் பக்கத்தில் - உங்களுடைய பார்ட்டி ஸ்டீம் போட்டில் வந்து.. பிஸ்கெட்ஸை எடுத்துக்குவாங்க... இல்லையா..?"

"ஆமா.."

"அப்படி... உங்க பார்ட்டி வரலைன்னா.. என்ன பண்ணுவீங்க..?"

"பார்ட்டி கண்டிப்பா வருவாங்க.. ஸார்.."

"ஒருவேளை.. பார்ட்டி வரலைன்னா.. அந்த தங்க பிஸ்கெட்டுகளை சிங்கப்பூர் போர்ட்டுக்கு கொண்டுட்டு போக முடியாது.. மிஸ்டர் சுபாஷ்... கொண்டு போனா அங்கே இருக்கிற கஸ்டம்ஸ் கிட்டே மாட்டிக்குவீங்க.."

"எனக்குத் தெரியும்.. அந்த நிலைமை எங்களுக்கு வராது. பேர்ரன் ஐலேண்டுக்குப் பக்கத்தில் - பார்ட்டி ஸ்டீம் போட்டோடு தயாரா



காத்திட்டிருப்பாங்க."

"உங்களுக்கு.. அந்த நம்பிக்கை இருந்தா சரிதான்.. வேற ஏதாவது டெர்ம்ஸ் அண்ட் கண்டிஷன்ஸ் இருக்கா..?"

"புதுசா எதுவும் இல்லை... ஏற்கெனவே.. உங்ககிட்ட பேசியதுதான்.. பாலாஜி எல்லாத்தையும் சொல்லியிருக்கலாம்.."

"ம்.. சொன்னான்.."

சுபாஷும், பிரபலாவும் எழுந்தார்கள்.

"அவ்வளவுதான்..! நாங்க புறப்படறோம்.. நாளைக்கு ராத்திரி எட்டு மணிக்கெல்லாம்... போர்ட்டுக்கு வந்துடறோம். உங்களுக்கு சேரவேண்டிய பணத்தை ஏற்கெனவே குடுத்துட்டோம். பிஸ்கெட் மட்டும் ஷிப்ல தந்துடறோம். ஓ.. கே..?"

"ஓ.. கே.."

"குட் நைட்.."

மறுபடியும் இருவரும் கைகுலுக்கி விடைபெற்றுக் கொண்டு கார்க்கு போக அவர்களைப் பின் தொடர்ந்த பாலாஜியின் தோளைத் தொட்டு நிறுத்தினார் தங்கராஜ்.

"ஒரு நிமிஷம்.."

"ஸாரீர்.."

"இவங்களை நம்பி உதவலாமா?"

"தாராளமாக உதவலாம் ஸார். ஹார்பரில் நான் கலாஸி வேலைக்கு வர்றதுக்கு முந்தி - அஞ்சு வருஷம் அவங்க

வீட்ல தோட்டக்காரனா இருந்திருக்கேன்.. செய்யறது நிழல் காரியமா இருந்தாலும். அதுல நேர்மை இருக்கும். யாரையும்... ஏமாத்த மாட்டாங்க... தான் மாட்டிக்கிட்டாலும் மத்தவங்களை காட்டிக் குடுக்க மாட்டாங்க..."

"உன் பேச்சை நம்பித்தான்... அவங்களுக்கு உதவப் போறோம்... நாளைக்கு ஏதாவது பிரச்சனைன்னா... நீ எங்க பக்கம்தான் நிக்கணும்."

"கண்டிப்பா... ஸார்...! எனக்கு அவங்களும் வேண்டியவங்க. நீங்களும் வேண்டியவங்க.. மோசமான பார்ட்டியா இருந்தா... உங்ககிட்டே கூட்டிட்டு வருவேனா ஸார்.."

"சரி.. நீ கிளம்பு.."

பாலாஜி விடைபெற்றுக் கொண்டு கார்க்கு வந்தான். பின்சீட்டுக் கதவை திறந்துக் கொண்டு அவன் ஏறியதும் கார் புறப்பட்டது. இருபதடி நகர்ந்ததும் பிரபாலா பாலாஜியிடம் திரும்பினாள்.

"என்ன பாலாஜி..? அவங்க ரெண்டு பேரும், இப்படி... உதறிக்கிறாங்க..?"

பாலாஜி சிரித்தான்.

"பின்னே... ஏன்னம்மா... பயம் இருக்காதா..? மாட்டிக்கிட்டா மேலிடத்துக்கு பதில் சொல்ல வேண்டியவங்க அவங்கதானே..?"

"இது ரொம்ப ரொம்ப ஈஸியான ஜாப்.. எந்த பயமும் படவேண்டியதில்லை.. கப்பல் போய் கிட்டு இருக்கும்போதே...



மத்த பிராயாணிகளுக்கு தெரியாமல்... சரக்கை ஏத்தறதும்... இறக்கறதும் எங்க வேலை.. காப்டனும் உத்வி காப்டனும் கையைக் கட்டிக்கிட்டு வேடிக்கை பார்த்திட்டிருந்தா, போதும்... திட்டம் க்ளியரா இருக்கு.. எந்த இடத்திலும் ஓட்டை கிடையாது.."

கார் ஸீ-மேன் குவார்ட்டர்ஸ் எல்லையைக் கடந்து மறுபடியும் கடற்கரை ரோட்டுக்கு வந்தது. மழை இப்போது சுத்தமாய் நின்று போய் காற்றில் குளிர் ஏறியிருந்தது.

சுபாஷ் ஸ்டியரிங்கை கையாண்டு கொண்டே கேட்டான். "பாலாஜி! நீ பணத்தை என்னைக்கு வாங்கிக்கிறே..? இப்பவேவா.. நாளைக்கா..?"

"இப்பவே குடுத்துட்டா பரவாயில்லை ஸார்.."

"சரி! கார்ல.. வீட்டுக்கு வா.. பணத்தை வாங்கிக்கலாம்.."

"ஸ..ஸார்.."

"சொல்லு.."

"பேசின தொகைக்கு மேல.. கொஞ்சம் போட்டுக் குடுங்க ஸார். வளசரவாக்கத்தில் ஒரு மனை பார்த்திருக்கேன்.. வாங்கணும்.."

"மனையை எவ்வளவுக்கு விலை பேசியிருக்கே?"

"பத்து லட்சத்துக்கு.."

"வெறும் மனை மட்டுமா?"

"ஆமா... ஸார்.."

"தர்றேன்... சமயத்துக்கு வந்து நீ பண்ணின உதவிக்கு... எவ்வளவு வேணும்னாலும் தர்லாம் பாலாஜி..."

"நான் என்ன ஸார், பெரிசா பண்ணிட்டேன்...? காப்டனும் உதவி காப்டனும் எனக்கு வேண்டியவங்க. அதை வெச்சு... என்னால முடிஞ்சதை ஏதோ பண்ணியிருக்கேன்..."

கார் கடற்கரையோர ரோட்டில் க்கர்ர்ர்ரென்று பயணித்து பட்டினப்பாக்கத்தை தாண்டியதும் இருட்டான ஒரு பகுதிக்குள் நுழைந்து நின்றது. ஆள் அரவமற்ற வெளிச்சம் சிறிதும் இல்லாதபிரதேசம். சாலையோர சுடுகாடு மாதிரி தெரிந்த அந்த இடத்தை உற்றுப் பார்த்துக் கொண்டே

பாலாஜி கேட்டான்.

"என்ன ஸார்... காரை இங்கேயே நிறுத்திட்டீங்க...?"

சுபாஷ் கார் என்ஜினை அணைத்து விட்டு திரும்பினான். "பாலாஜி! உனக்கு கல்யாணமாகிடுச்சா...?"

"இல்ல... ஸார்..."

"அப்பா, அம்மாவை காப்பாத்த வேண்டிய பொறுப்பில் இருக்கியா?"

"ஸார்... எதுக்காக... இந்த கேள்வியெல்லாம்... அதுவும் இந்த நேரத்துல...?"

"காரணமாத்தான்! சொல்லு..."

"உனக்கு அப்பா, அம்மா ரெண்டு



பேருமே இல்ல ஸார்."

"அப்படீன்னா... நீ ஒண்டிக்கட்டை...?"

"ஆமா... ஸார்..."

"சமீபத்துல எங்கேயாவது நீ ஜோஸ்யம் பார்த்தியா...?"

"ஸ... ஸார்..."

"கேட்ட கேள்விக்கு பதில்..."

"பார்க்கலை ஸார்..."

"நீ பார்த்திருக்கலாம்...! ஏன்னா உனக்கு ஆயுசு... இன்னியோடு முடியப் போகுது..." சொன்ன சுபாஷ் அதுவரைக்கும் கையில் மறைவாய் வைத்திருந்த ரிவால்வரை சட்டென்று உயர்த்தி விநாடிக்கும் குறைவான அவகாசத்தில் சுட்டான்.

சைலன்சர் ரிவால்வர் 'சுக்'கென்று தோட்டாவை உமிழ பாலாஜி நெஞ்சைப் பிடித்துக் கொண்டு சீட்டின் இடைவெளியில் விழுந்து நிசப்தமானான்.

சுபாஷ் காருக்கு வெளியே தலையை நீட்டி - பக்கவாட்டில் பார்த்து கையை அசைக்க கொஞ்சம் தள்ளி இருட்டில் நின்றிருந்த - ஒரு வேன் - மெல்ல உறுமி - வெளிச்சக் கண்களோடு நகர்ந்து காருக்கு பக்கத்தில் வந்து நின்றது.

இரண்டு பேர் இறங்கினார்கள்.

சுபாஷ் ஒரு சிகரெட்டை பற்றவைத்துக் கொண்டே அவர்களிடம் கேட்டான். "குழியை தோண்டி வைச்சிருக்கிங்களா...?"

"வெச்சாச்சு.. ஸார்.."

"பாலாஜியை நீட்டா அடக்கம் பண்ணிட்டு பங்களாவுக்கு வந்து சேருங்க.. நாளைக்கு செய்ய வேண்டிய காரியங்களைப் பத்தி பேசணும்.."

அவர்கள் காரின் பின்பக்கக் கதவைத் திறந்து - சீட்டுக்கு கீழே ரத்தமாய்க் கிடந்த - பாலாஜியை வெளியே இழுத்து தூக்கிக் கொண்டு - இருட்டில் பெருமூச்சுகளோடு மறைந்தார்கள்.

* * * * *




**THE INDIAN NAVY IS ORGANISED INTO THREE COMMANDS UNDER FLAG OFFICER COMMANDING.IN CHIEF. THE NAVY HAS TWO FLEETS THE WESTERN FLEET AND THE EASTERN FLEET.**

சுபாஷும், பிரபலாவும் ஈக்காடுதாங்கலில் இருந்த தன் பங்களாவுக்குத் திரும்பி பூட்டைத் திறந்து கொண்டு உள்ளே போனபோது - ஹால் கடிகாரம் ஒருமணி அடித்தது. ட்யூப் லைட்டை உயிர்ப்புக்கு கொண்டு வந்த சுபாஷ் - அந்த வெளிச்சத்தில் பிரபலாவின் முகத்தைப் பார்த்து நெற்றியைச் சுருக்கினான்.

"என்ன.. பிரபலா.. தூக்கமா..?"

"ஊ..ஹூம்.."



"பின்னே.. ஏன் டல்லடிக்கிறே..? கார்ல வரும்.. போதும் சரி.. ஒண்ணும் பேசவேயில்லையே..?"

"அண்ணா! நீ பாலாஜியை கொன்னது எனக்கு கொஞ்சம்கூட பிடிக்கலை.. அவனுக்கு பணத்தை குடுத்து அனுப்பிச்சிருக்கலாம்.. அவன் நம்ம வீட்ல இருந்த வரைக்கும் விசுவாசமாத்தான் இருந்தான். ஹார்பர்ல போய் வேலைக்கு சேர்ந்தப்பவும் அவனுக்கு இருந்த விசுவாசம் குறையலை.."

சுபாஷ் சிரித்தான்.. "பிரபலா! நாம பண்ற தொழிலுக்கு சென்டிமெண்ட்ஸ் பார்க்கக்கூடாது.. நமக்கு உதவப் போகிற கப்பல் காப்டனும் சரி.. உதவி காப்டனும் சரி.. நம்ம விவகாரங்களை வெளியே சொல்ல மாட்டாங்க.. எந்த சந்தர்ப்பத்திலும் காட்டி குடுக்க மாட்டாங்க.. ஆனா பாலாஜி அப்படியில்லை.. பணத்துக்காக அவன் எப்படி வேணுமின்னாலும் மாறுவான்.. போலீஸுக்கு இன்ஃபார்மரா திடீர்னு மாறி - உன்னையும் என்னையும் கைகாட்டவும் தயங்கமாட்டான்."

"நீ.. என்னதான் சொல்லு.. எனக்கு மனசு ஆறலை.."

"ஷிவாஸ் ரீகல் ரெண்டு பெக் அடி.. பாலாஜி ஞாபகத்துக்கு வரமாட்டான்." சுபாஷ் சொல்லிக் கொண்டே உள்ளே போய் - அந்தச் சிறிய அறைக்கு முன்பாய் நின்று பூட்டப்பட்டிருந்த மேக்னடிக் லாக்கரைத் திறந்தான்.

"என்னண்ணா... பாஞ்சா கூட பேசப் போறியா..?"

"ஆமா."

"அவர் பேர்ரன் ஐலேண்டுக்கு வந்திருப்பரர்ன்னு நினைக்கிறியா?"

"ட்ரை பண்ணிப் ப்ார்க்கலாம்... கிடைச்சா பேசலாம்.." அறைக்குள் நுழைந்த சுபாஷ் - சுவரோரமாய் போட்டிருந்த - பெரிய மேஜையை நகர்த்திப் போட்டுவிட்டு கார்பெட்டை சுருட்டி ஸ்பார்டெக் கற்களை பெயர்த்து ஓரமாய் வைத்தான்.

உள்ளே -

சின்னதாய் ஒரு வயர்லெஸ் சாதனக் கூடம்.

மைக்ரோ ரிஸீவரை எடுத்து - காதுக்கு பொருத்திக் கொண்டு - உருண்டையான மைக்ரோபோனில் ப்ரீக்வென்ஸி... மானிட்டரை - இயக்கியபடி... "ஹலோ... ஹலோ..." என்றான்.

ப்ரீக்வென்ஸி கிடைத்ததும் -

மெல்லிய குரலில் சொன்னான்.

"இந்தியப் பறவை சிறகடிக்கும் நேரம்.."

"..."

"ஹல்லோ... இந்தியப் பறவை சிறகடிக்கும் நேரம்..." இரண்டு தடவை திரும்பத் திரும்ப இப்படிச் சொன்னதும் மைக்ரோ ரிஸீவரில் திடும்மென்று அந்தக்



குரல் கேட்டது.

"இங்கே மீன் நீந்தும் நேரம்."

சுபாஷ் மைக்ரோ போனின் வாயை மூடிக் கொண்டு பக்கத்தில் உட்கார்ந்திருந்த பிரபலாவிடம் சொன்னான். "பாஞ்சா பேசறார்.."

பிரபலா ஆர்வமாக - உரையாடல் தொடர்ந்தது.

"நாளை இரவு பத்து மணிக்கு திரை தூக்கப்படுகிறது.."

"அதில் மாற்றமில்லையே..?"

"இல்லை.."

"எத்தனை அழகிகள்..?" (அழகி = கிலோ தங்கம்)

"ஐம்பது.."

"வேடர்கள் தொந்தரவு..?"

"இருக்காது.. ஏதாவது தொந்தரவு மாற்றம் இருந்தால் உடனே இந்தியப் பறவை சிறகடிக்கும்.."

"மீன் இங்கே ஆரோக்யமாய் நீந்துகிறது..."

"ரோஜர்..."

மைக்ரோ ரிஸீவரையும் போனையும் கழற்றி அதற்கு உரிய இடத்தில் பொருத்தி விட்டு ஸ்பார்டெக் கற்களை எடுத்து - மூடி விரிப்பை பரப்பி - மேஜையை இழுத்து அதன்மேல் போட்டான்.. சுபாஷ்.

வாசலுக்கு வெளியே -

காலிங்பெல் கதறியது.

"பிரபலா! போய்ப் பார்... சாமிதுரையும், கிருஷ்ணனும்... வந்திருப்பாங்க..."

பிரபலா - எழுந்து - ஹாலில் நடந்து - கதவின் வ்யூ ஃபைண்டரில் பார்த்து தாழ்ப்பாளை விலக்கினாள்.

சாமிதுரையும், கிருஷ்ணனும் உள்ளே வந்தார்கள். சுபாஷ் அவர்களை எதிர் கொண்டபடி கேட்டான்.

"என்ன பாலாஜியை அடக்கம் பண்ணிட்டீங்களா...?"

"பண்ணிட்டோம் ஸார்..."

"புதைச்ச இடத்தைப் பார்த்தா... யார்க்கும் எந்த சந்தேகமும்... வராதே...?"

"வராது... ஸார்... அது ஒரு புறம்போக்கு நிலம்... அந்த ஏரியாவில் இருக்கிறவங்க... அதை ஒரு டெம்பரரி சுடுகாடா வைச்சுகிட்டு... யாராவது செத்தா புதைச்சுட்டு வர்றாங்க... அந்த சுடுகாட்டுக்கு வெட்டியான் கிடையாது... பொணத்தை கொண்டுட்டு வர்றவங்களே - குழியைத் தோண்டி புதைச்சுட்டு போக வேண்டியதுதான்..."

"சரி நாளைக்கு ராத்திரி... நீங்க ரெண்டு பேரும் செய்ய வேண்டிய காரியங்களைப் பத்தி மறுபடியும் ஒரு தடவை தெளிவா சொல்லிடறேன். சந்தேகம் ஏதாவது இருந்தா உடனே கேட்டுத் தெரிஞ்சுக்கணும்... திட்டம் கொஞ்சம் பிசகினாலும்... அம்பது கிலோ தங்கம்... போலீஸ் கைக்கு போறது மில்லாமே...



எல்லாரும் பர்மனென்டா... அரசாங்க விருந் தாளிகளா போக வேண்டியதுதான்..." சொன்ன சுபாஷ் தொண்டையைக் கனைத்துக் கொண்டு தொடர்ந்தான்.

"நாளைக்கு ராத்திரி சரியா ஒன்பது மணிக்கு ஈஞ்சம்பாக்கம் கடற்கரை பகுதியிலிருந்து - ஸ்டீம் போட்ல அம்பது கிலோ தங்கத்தோடு புறப்படணும். நானும் பிரபலாவும் பயணப்பட்டு வர்ற கப்பல் பத்தரை மணி சுமார்க்கு... நடுக்கடலுக்கு வரும் போது - உங்க ஸ்டீம் போட் எதிர்படணும்... கப்பலின் முதல் டெக்கிலிருந்து நானும் பிரபலாவும்... க்ரீன் டார்ச்சை அடிச்சு காட்டுவோம்... க்ரீன் சிக்னல் கிடைச்சதும் - கப்பலின் டெய்ல் போர்ஷனுக்கு ஸ்டீம் போட் வரணும். காப்டனும் உதவி காப்டனும் பேச்யார்ட் ஜன்னலிலிருந்து - ஒரு கொக்கி கோர்த்த இரும்புச் சங்கிலியை ஸ்டீம் போட் பக்கமா விடுவாங்க. நீங்க அந்த கொக்கியை பிடிச்சு தங்கம் இருக்கிற பெட்டியின் ஹூக்கில் மாட்டி விடணும்! அவ்வளவுதான்... தங்க பிஸ்கெட்ஸ் பெட்டி மேலே... வந்துடும்... நீங்க உங்க வழியே மறுபடியும் ஈஞ்சம்பாக்கம் போயிடலாம்... நானும் பிரபலாவும்... அன்னிக்கு ராத்திரி தூங்காமே விழிச்சிருந்து விடியற்காலை அஞ்சு மணிக்கு கப்பல் போர்ட் ஐலேண்ட்டை தொட்டதும்... அங்கே காத்திருக்கிற பாஞ்சாவுக்கு... பெட்டியை குடுத்துட்டு... சிங்கப்பூர் போயிடுவோம்... சிங்கப்பூர்ல ரெண்டு நாள் தங்கி நம்ம பிஸினஸ்

ஆட்களை பார்த்துட்டு மூணாவது நாள் காலையில் மெட்ராஸுக்கு ஷிப்ளெட்ல வந்துடுவோம்."

சுபாஷ் பேச்சை நிறுத்தி சில விநாடி அங்கே நிலவிய மௌனத்தை அவனே கலைத்தான்.

"சாமிதுரை! கிருஷ்ணன்! ஏதாவது சந்தேகம் இருக்கா..?"

"நீங்க சொன்னதே க்ளியரா இருக்கு ஸார்..."

"நேரம் பிசகாமே காரியத்தை பண்ணணும்... ஒன்பது மணிக்கெல்லாம் ஸ்டீம் போட்டை கிளப்பிடணும்..."

சாமிதுரையும், கிருஷ்ணனும் தலையாட்டினார்கள்..

* * * * *




INS-GAJ. IT IS THE INDIAN NAVY'S BIGGEST TUG BUILT FOR ROWING LARGE SHIPS, FIRE FIGHTING AS ALSO FOR SALVAGE AND RESCUE OPERATION IN DEEP SEA.

மறுநாள் இரவு 9.45 மணி. சென்னை துறைமுகம்.

கப்பல் 'சாம்ராட்' பிரம்மாண்டமான பங்களாவைப் போல் ஏராளமான விளக்குகளோடு அசைந்து கொண்டிருந்தது. ஸ்போர்ட் டெக்கிலும், சன்



டெக்கிலும் பிரயாணிகள் நின்று இருட்டில் அசைகிற கடலை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். நேவிகேட்டில் ப்ரிட்ஜின் மேல்.ராடார் ஆன்டெனா சிவப்பு விளக்குகளோடு எரிந்தது.

வீல் ஹவுஸுக்கும், வயர்லெஸ் ரூமுக்கும் நடுவில் இருந்த ஒரு கேபினுக்குள் காப்டன் தங்கராஜ், உதவி காப்டன் ஜெகதீஷ், சுபாஷ், பிரபலா நான்கு பேரும் ஒரு ரவுண்ட் டேபிளை சுற்றி உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

தங்கராஜ் கேட்டார்.

"ஈஞ்சம்பாக்கம் கோஸ்டல் ஏரியாவிலிருந்து உங்க ஆட்கள் ஸ்டீம் போட்டில் புறப்பட்டிருப்பாங்களா.. சுபாஷ்..?"

"கண்டிப்பாய்..."

"ஆட்கள் நம்பிக்கையானவங்க தானே..?"

"ஆமா.. உயிரைக் குடுன்னு சொன்னா போதும்... நெஞ்சில் கத்தியை சொருகிகிட்டு... என் காலடியில் விழுந்து உயிரை விடுவாங்க..."

"இந்த மாதிரியான தொழிலுக்கு அப்பேர்பட்ட விசுவாசமான ஆட்கள் தான் வேணும்."

"சரக்கை ரிஸீவ் பண்ண பேர்ரன் ஐலேண்டிங் ஹேண்ட் ஓவர் பண்ணுகிற வரைக்கும்... ஜுரம்தான்..." சுபாஷ் சொல்லிக் கொண்டிருக்கும்போதே சுவரில் தொங்கிக் கொண்டிருந்த இண்டர்காம் ரிஸீவர் மணியடித்தது.

ஜெகதீஷ் எழுந்து போய் ரிஸீவரை எடுத்தார். மறுமுனையில் குரல் கேட்டது "ஸார்! நான் நிவாஷ்... டர்னபன் கண்ட்ரோல் ரூமிலிருந்து பேசறேன்..."

"என்ன விஷயம்..?"

"ரெண்டு டர்னபன் என்ஜினில் ஒன்று லேசாய் மக்கர்..."

"சரி பண்ணக்கூடிய மக்கர்தானே..?"

"இப்போதைக்கு சரிப்படுத்திவிட லாம்... ஆனா... ஜர்னி ஹவர்ஸில் சுயரூபத்தைக் காட்டினால்தான் வம்பு..."

"ஸ்டோர் ரூமில் ஸ்பேர் இருக்கும் மாத்திடுங்க..."

"எஸ்... ஸார்..."

ஜெகதீஷ் ரிஸீவரை மாட்டிவிட்டு மறுபடியும் மேஜைக்கு வந்து தங்கராஜிடம் விபரத்தை சொல்லிவிட்டு உட்கார்ந்தார். பிரபலா கேட்டாள்.

"ஷிப்பில் இப்போ... மொத்தம்... எத்தனை பேர் இருப்போம் ஸார்..."

"பாஸஞ்சர்ஸ்... நூத்தி பதினாலு பேர்... நேவி ஃஸ்டாஃப்... பதினேழு பேர்... மொத்தம் முப்பத்தியோர் பேர்..."

"பாஸஞ்சர்ஸில் வி.ஐ.பி யாராவது இருக்காங்களா?"

"ஒன்லி ஒன் பர்ஸன்..."

"யார்..?"

"இண்டர்நேஷனல் ஸ்விம்மர்... சரண் மாத்தூர்..."



"பாஸஞ்சர்ஸ் கூட்டம் ஏன் இவ்வளவு குறைச்சல்..."

"ஃப்ளைட்டுக்கு போகிறவர்கள்தான் அதிகம்... சிங்கப்பூர் ஏர்லைன்ஸ்தான் இப்போ... லோக்கல் பஸ்ஸஸ் மாதிரி... ஏகப்பட்ட ஃப்ளைட்டுகளை விட்டிருக் காங்களே...! போதாத குறைச்சலுக்கு... மலேஷியா மாஸ் ஃப்ளைட்ஸ் வேறே..."

தங்கராஜ் கையில் கட்டியிருந்த வாட்ச்சைப் பார்த்துக் கொண்டு எழுந்தார். "டைம் ஈஸ்... நைன் ஃபிப்டி ஃபைவ்... சுபாஷ் பிரபலா... நீங்க ரெண்டு பேரும் மேல் டெக்குக்கு போங்க... நான் ஷிப் மூவ் ஆனதும் உங்களை வந்து பார்க்கிறேன்..."

சுபாஷ், பிரபலா இருவரும் - கேபினை விட்டு வெளியே வந்தார்கள். கப்பலின் தளங்கள் வெளிச்சமாய் - பிரயாணிகளின் உரையாடல்களோடு இருந்தது. மேல் தளத்தின் படிகளில் ஏறிக்கொண்டே பிரபலா கேட்டாள்.

"அண்ணா! திட்டப்படி எல்லாம் நடக்குமா?"

"நடக்கும்..."

"சாமிதுரையும், கிருஷ்ணனும் ஏமாத்திடுவாங்களோன்னு... என் மனசுல ஒரு சஞ்சலம்..."

"ஏன் அப்படி உனக்கு தோணுது..?"

"இந்த தடவை... சரக்கு அதிகம்..."

"அப்புறம்..?"

"நம்ம கண்காணிப்பு எல்லையிலிருந்து விலகியிருக்காங்க.. அவங்களாலே.. எதையும் செய்ய முடியும்.."

"தங்கத்தோடு... அவங்க ரெண்டு பேரும் ஓடிடுவாங்கன்னு சொல்றியா?"

"ஆமா.."

"அப்பேர்ப்பட்ட முட்டாள் தனத்தை.. அவங்க பண்ணமாட்டாங்க..! ஏன்னா அதுக்கு முந்தி எனக்கு துரோகம் பண்ணின ஆட்களுக்கு... என்ன கதி நேர்ந்ததுன்னு அவங்களுக்கு தெரியும்.."

"நீ... என்னமோ சொல்றே...! தங்கம் கைக்கு வந்து சேர்கிற வரைக்கும் எனக்கு நம்பிக்கையில்லை.."

இருவரும் ஏறி மேல் தளத்துக்கு வந்தார்கள்.

சென்னை நகரம் சமிக்கி புடவையை போர்த்துக்-கொண்ட மாதிரி.. வெளிச்சப் பொட்டுகளோடு தெரிந்தது. லைட் ஹவுஸ் வெளிச்சமாய் சுழன்றது. கறுப்பு ஆகாயத்தில் சேதமான நிலாவும் - நட்சத்திரங்களும் தெரிய - கடற்காற்று ஸ்டைஸ்ஸென்று தலைமுடியைக் கலைத்தது.

சரியாய் பத்து மணிக்கு - ஷிப் சைரன் ஒலித்தது.

கப்பலின் பின்புறமிருந்து ப்ரொப்பல்லர்கள் சுழல காற்று அதிர்ந்து சாம்ராட் நகர்ந்தது. வழியனுப்ப வந்தவர்கள் துறைமுக தளத்திலிருந்து கைகளை ஆட்ட - பயணிகள் கப்பலின் தளத்திலிருந்து கைகளை அசைத்தார்கள்.



துறைமுகம் பின்வாங்கியது. சென்னையின் வெளிச்சப் பொட்டுகள் - காணாமல் போயிருந்தபோது காப்டன் தங்கராஜ் மேலே வந்தார்.

"சுபாஷ்! எங்க... தரப்பில்... நாங்க... ரெடியா... இருக்கிறோம். சானரத்தின் வழியே வீச கொக்கியும் - சங்கிலியும் தயார்... உங்க ஆட்கள் சரியா பத்தரை மணிக்கு... ஷிப்பை ஃபேஸ் பண்ணுவாங்களா..?"

"கண்டிப்பா.."

தளத்திலேயே மூன்று பேரும் காத்திருந்தார்கள்.

நேரம் 10.10.

10.15.

10.20.

10.25.

சாம்ராட் நீரைக் கிழித்து - அலைகளை தாஜா செய்து குழி போட்டுக் கொண்டு போயிற்று. சுபாஷ் தன் பாக்கெட்டில் இருந்த க்ரீன் டார்ச் விளக்கை எடுத்துக் கொண்டான்.

நேரம் 10.27.

மூன்று பேரும் - கடல் பரப்பின் இருட்டைச் சுற்றிச் சுற்றிப் பார்த்தார்கள்.

எந்த திசையிலும் - ஒரு ஒளிக்கீற்று கூட இல்லை.

10.28.

10.29

10.30

காப்டன் கேட்டார். "என்ன.. சுபாஷ்.. நேரம் பத்தரை.. உங்க ஆட்களை இன்னமும் காணோம்?"

"எப்படியும் வந்துடுவாங்க ஸார்."

"அண்ணா..! நீ டார்ச்சை அடிச்சு.. நாலாபக்கமும் காட்டு." பிரபலா சொல்ல - டார்ச் பட்டனை அழுத்தினான் சுபாஷ்.

வெளிச்சம் பீறிட்டது. அந்த பச்சையான வெளிச்சக் கற்றையை நான்கு திசைக்கும் துரத்தினான் சுபாஷ்.

10.31.

'இந்த நேரத்துக்கு எதிர்பட்டிருக்கணுமே..?'

'கடலில் - ஏதாவது வழி மாறி போய்விட்டார்களா..?"

சுபாஷ் தவிப்பாய் யோசித்துக் கொண்டிருக்கும்போதே - தென் கிழக்கிலிருந்து கடலின் இருட்டில் பச்சை விளக்கு ஒளிர்ந்து ஒளிர்ந்து அடங்கியது. காப்டன் தங்கராஜ் பரவசமாய் கத்தினார்.

"தே.. ஆர் கம்மிங்.."

"நான் சொல்லலை...? சொன்னா சொன்னபடி வரக்கூடிய ஆட்கள் ஸார்.." சுபாஷ் சொல்லிக் கொண்டே டார்ச் விளக்கை - உயர்த்தி - அசைத்தான். கடலின் இருட்டில் உற்பத்தியான பச்சை விளக்கும் அதன் வெளிச்ச விட்டமும் பெரிதாகிக் கொண்டே வந்தது.

"சுபாஷ்! பிரபலா கையில் அந்த



டார்ச்சை குடுத்துவிட்டு நீங்க எம்பின்னாடி வாங்க.. யார்க்கும் தெரியாமே கேபின் சாளரத்திலிருந்து - ஸ்டீம் போட்டுக்கு.. கொக்கிச் சங்கிலியைப் போட்டு தங்கம் இருக்கிற பாக்ஸை எடுத்து கேபினுக்கு கொண்டுபோகிற வரைக்கும் நீங்க.. பக்கத்திலேயே இருக்கணும்.."

சுபாஷ் பிரபலாவின் கையில் டார்ச்சை கொடுத்துவிட்டு - கேப்டனை தொடர்ந்தான். இரண்டாவது தளத்துக்கு வந்து - பாஸஞ்சர்களின் அறைகளை தாண்டும்போது - சில அறைகளில் மட்டும் வெளிச்சம்தெரிந்தது. பாட்டுச் சத்தமும் பேச்சுக் குரலும் இடை இடையே கேட்டது. ட்யூப் வராந்தாவில் குனிந்துநடந்தார்கள்.

"காப்டன்.."

"ம்.."

"பாஸஞ்சர்ஸுக்கு தெரியாமல்... ஸ்டீம் போட்டிலிருந்து தங்கம் இருக்கிற பாக்ஸை எடுக்க முடியுமா?"

"முடியும்... ஷிப்பின் கைண்ட் போர்ஷனிலிருந்துதான் இந்த காரியத்தை ஆரம்பிக்கிறோம்... எந்த பாஸஞ்சரும் பார்க்க வாய்ப்பே இல்லை.."

கேபினுக்குள் நுழைந்தார்கள்.

க்ரோனோ மீட்டரை சரிபார்த்துக் கொண்டிருந்த ஜெகதீஷ், சத்தம் கேட்டு திரும்ப தங்கராஜ் சொன்னார்.

"சுபாஷோட ஆட்கள் வந்திட்டி ருக்காங்க... ஜெகதீஷ்... நீங்க கொக்கி

செயினை எடுத்துக் கைண்ட் போர்ஷனுக்கு போங்க. நான் பாஸஞ்சர்ஸையும் டெக் ஆபீஸர்ஸ் நடமாட்டத்தையும் கண்காணிச்சுட்டிருக்கேன்..."

"எஸ் காப்டன்..."

சுபாஷ், ஜெகதீஷோடு - கப்பலின் கைண்ட் போர்ஷனுக்கு வந்தான். அந்த போர்ஷனில் மெலிதான இருட்டு. ப்ரொப்பல்லர்கள் சுழலும சத்தம் ஜகஜகவென்று கேட்டுக் கொண்டிருந்தது. ஜெகதீஷ் அங்கிருந்த சாளரக் கதவைத் திறந்து அதன் பெரிய சதுரத்தின் வழியே வெளியே எட்டிப் பார்த்தார். கடல் காற்று குப்குபுவென்று உள்ளே புகுந்து இருவரையும் அலம்பியது. சிறிது தூரத்தில ஸ்டீம் போட், க்ரீன் சிக்னல் கொடுத்துக் கொண்டே கப்பலின் பின் பக்கத்தை நெருங்கிக் கொண்டிருந்தது.

"சுபாஷ்! உங்க ஆட்கள் சரியான டைரக்ஷனில் வந்துகிட்டு இருக்காங்க..."

"எத்தனை தடவை சொல்லி குடுத்திருப்பேன்..."

ஸ்டீம் போட்... மெல்ல மெல்ல நெருங்கி - அதன் இரைச்சலை நிறுத்திக் கொண்டு - சாளரத்துக்கு கீழே வந்தது. ஜெகதீஷ் கொக்கிச் - செயினை சாளரத்துக்குள் நுழைத்து கீழே சரிய விட்டார்.

ஐந்தே விநாடிகள்!

தங்கம் இருந்த பெட்டி - கொக்கியில் மாட்டப்பட்டு சைகை காட்டப்பட்டு



மேலே இழுபட்டது. ஜெகதீஷும், சுபாஷும் இழுத்தார்கள். தம்பிடித்து.

சிறிது சிறிதாய் - பெட்டி மேலே வந்தது.

காப்டன் தங்கராஜ் உள்ளே நுழைந்து அவசரப்படுத்தினார்.

"சீக்கிரம்... சீக்கிரம்."

பெட்டியை சாளரத்தினின்றும் - இழுத்து கீழே கிடத்தி - சுபாஷ் லாக்கரை விடுவித்து - திறந்தான். உள்ளே பாலிதீன் கவர்களில் - தங்கம் பிஸ்கெட்டுகளாய் மாறி பதுங்கியிருந்தது.

"காப்டன்! நம்ம தேவி க்ரூஸ் யாரும் பார்த்திருக்க மாட்டாங்களே..?"

"யாரும் பார்க்க வாய்ப்பில்லை... ஜெகதீஷ்..."

சுபாஷ் சாளரத்தின் வெளியே எட்டிப்பார்த்து - ஸ்டீம் போட்டில் இருக்கும்... சாமிதுரைக்கும் கிருஷ்ணனுக்கும் கையசைத்தான். அவர்களும் தலைகளை உயர்த்தி சுபாஷுக்கு கையசைத்த விநாடி -

டெக்கின் முதல் தளத்திலிருந்து -

நெருப்புப் பிழம்புகளோடு -

சத்தமில்லாமல் -

அந்தத் துப்பாக்கித் தோட்டாக்கள் பாய்ந்து சாமி துரையையும் கிருஷ்ணனையும் சிதறடித்து நீரில் சாய்த்தன.

★ ★ ★ ★ ★



# 4



**A HIGHLY ORGANIZED TEAM OF OFFICERS COMMANDS A SHIP. THE TOP MAN IS CALLED THE CAPTAIN. HE HAS FIINAL AUTHORITY OVER AND FINAL RESPONSIBLITY FOR THE PASSENGERS, CREW, CARGO AND SHIP.**

சுபாஷ் திடுக்கிட்டு சாளரத்தினின்று திரும்பி... டெக்கோட முதல் தளத்திலிருந்து... யாரோ துப்பாக்கியால் சுட்டுட்டாங்க..."

அவன் சொன்னதைக் கேட்டு தங்கராஜ் ஜெகதீஷ் இருவரும் உதட்டில் புன்னகையை காண்பித்தார்கள்.

"என்ன ஸார் சிரிக்கிறீங்க..?"

தங்கராஜ் அவன் தோளில் தட்டினார். "அந்த ஐம்பது கிலோ தங்கம் கப்பலுக்கு வந்து சேர்கிற வரைக்கும்தான்... உன்னோட திட்டம். இனிமே நடக்கப் போறதெல்லாம் எங்க திட்டம்... எங்க திட்டத்தோட, முதல் கட்டம்தான்... சாமிதுரையும், கிருஷ்ணனும் குண்டடி வாங்கி செத்தது."

"உ... உங்க திட்டமா...? என்ன உளர்றிங்க... காப்டன்...?"

"எஸ். எங்க திட்டம்தான்... இந்த ஐம்பது கிலோ தங்கத்தை நாங்களே எடுத்துக்கப் போறோம்... நாங்கன்னா... நானும் ஜெகதீஷ் மட்டுமில்லை. இன்னும்



மூணு பேர் இருக்காங்க.

"ஷிப்பின் சீஃப் என்ஜினியர் ஹரி சாஸ்திரி, டெக் ஆபீஸர் ஷ்யாம்லால், சார்ட் ரூம் ஆபரேட்டர் ராம் சின்ஹா. இந்த மூணுபேரையும் பார்க்கறியா.... சுபாஷ்...? இன்னும் ரெண்டு நிமிஷத்துல அவங்களே இங்க வருவாங்க..."

சுபாஷ் ஆத்திரமாகி ஜெகதீஷின் மேல் பாய்ந்து அவரை தாக்க முயல ஜெகதீஷ் விலகிக் கொண்டு சிரித்தான்.

"வேண்டாம் சுபாஷ்...! இந்த பூனை பாய்ச்சலெல்லாம் என்கிட்ட... வேண்டாம்... ட்ராகன் ஜெயராஜ் எனக்கு குரு... கராத்தே குங்ஃபூ... அட்சரம் பிசகாமே படிச்சிருக்கேன்... உடம்புல இடம் பார்த்து தட்டினா... ரெண்டு மணி நேரத்துக்கு ஜடம் மாதிரி ஆயிடுவே... சின்னதா ஒரு சாம்பிள் காட்டட்டுமா...? சொன்ன ஜெகதீஷ் வலது கையில் இரண்டு விரல்களை மட்டும் விருட்டென்று நீட்டி - சுபாஷின் இடது முழங்கை மேல் - ஒரு தட்டு தட்டினான்.

முழங்கை முழுவதும் ஐஸ் வாட்டரில் முக்கியெடுத்த மாதிரி உணர்ச்சி. இது இரண்டு விநாடி நேரம்தான். பிறகு... நரம்புகளின் சந்திப்புகளில் தீப்பற்றிக் கொண்டது. அதுவும் இரண்டு விநாடிதான்.

அந்த நான்கு விநாடி வேதனையில் - சுபாஷின் உடல் வெள்ளமாய் வியர்த்து கொட்டியிருந்தது.

"எப்படியிருக்கு சுபாஷ்...? என்கிட்டதான் இந்த திறமை இருக்குன்னு

நினைச்சுடாதே. காப்டன் தங்கராஜுக்கு இதைவிட அதிகம் தெரியும்..."

சுபாஷ் அந்த இரண்டு பேரையும் பயமாய் பார்த்துக் கொண்டிருக்கும் போதே பின்பக்கம் கதவொன்று திறந்து கொள்ளும் சத்தம் கேட்டது.

திரும்பினான்.

பிரபலா கலவரமாய் உள்ளே வந்து கொண்டிருந்தாள். அவளுக்கு பின்னால் மூன்று பேர் மூன்று பேர்களின் கைகளிலும் சின்னச் சின்னதாய் ரிவால்வர்கள்.

"அ... அண்ணா... இவங்க... நம்ம... ஆட்கள் சாமிதுரையையும்... கிருஷ்ணனையும் சுட்டு... கொ... கொன்னுட்டாங்க..." பிரபலா அழுகிற குரலில் சொல்ல - தங்கராஜ் சிரித்தார்.

"உன்னோட அண்ணன் அவங்க வீர மரணத்தை பார்த்துட்டுதான் இருந்தார் பிரபலா..." சொன்னவர் சுபாஷிடம் திரும்பினார். "நான் சொன்ன அந்த மூணுபேர் இவங்கதான் சுபாஷ்... ஹரி... ஈஸ் சீஃப் என்ஜினியர் ஹரி சாஸ்திரி, டெக் ஆபீஸர் ஷ்யாம்லால், சார்ட் ரூம் ஆபரேட்டர் ராம் சின்ஹா. எங்க அஞ்சு பேர்க்குமே ரொம்ப நாளாவே மனசுக்குள்ளே ஒரு திட்டம் இருந்தது. ஷிப்பில் இது மாதிரி ஏதாவது ஒரு பெரிய 'அயிட்டம் மாட்டும் போது அதை எங்களுக்கு சொந்தமாக்கிக்கணும்ன்னு உள்ளூர ஒரு நமைச்சல்..."



ஜெகதீஷ் குறுக்கிட்டார்... "இன்னிக்கு இந்த தங்கம் மட்டும்தான் எங்க கையில் மாட்டியிருக்குன்னு நினைச்சுடாதே... இருபது கோடி ரூபாய் பெறுமான ஹெராயின், பிரவுன் சுகர் இந்த நிமிஷம் இந்த ஷிப்பில் இருக்கு...! என்ன அப்படி பார்க்கிறே...? நிஜமாத்தான் சொல்றேன். இந்தக் கப்பலில் இருக்கிற நூத்தி பதினாலு பாஸஞ்சர்ஸில் எண்பது பேர்... போதை மருந்தை கடத்தறாங்க... மீதி முப்பத்தி நாலு பேர்தான் உண்மையான பாஸஞ்சர்ஸ்... போதை மருந்துகளை தன்னோட லக்கேஜ்களோடு கலந்து - உள்ளே கொண்டு வந்திருக்காங்க... ஏறக்குறைய இருபது கோடி ரூபாய் மதிப்புள்ள அந்த போதை மருந்துகளையும் - இந்த ஐம்பது கிலோ தங்கத்தையும் நாங்க அஞ்சு பேரும் எடுத்துக்கப் போறோம்..."

ஜெகதீஷ் பேச்சை நிறுத்த தங்கராஜ் தொடர்ந்தார்...

"எங்க நேவி ஃபோர்ஸுக்கு தெரியாமே... இந்த இந்திய அரசாங்கத்துக்கு தெரியாமே... தங்கத்தையும், போதை மருந்துகளையும்... எங்களுக்கு சொந்தமாக்கிக்க... ஒரு திட்டத்தை செட் பண்ணியிருக்கோம்... அந்த திட்டம் இந்த நிமிஷத்திலிருந்து அரங்கேற்றம்... திட்டம் முடிகிற வரைக்கும்... நாங்க... என்ன சொல்றோமோ... அதைத்தான் அண்ணன் தங்கச்சி ரெண்டு பேரும் கேக்கணும்... கேக்கலைன்னா அந்த நிமிஷமே சுடுவோம்... பிணங்களை கடல்ல எறிஞ்சுட்டு... நாங்க பாட்டுக்கு போய்கிட்டு

இருப்போம்..."

சுபாஷும், பிரபலாவும் - பயத்தில் உலர்ந்து போய் - தலைகளை ஆட்ட, தங்கராஜ் ஜெகதீஷிடம் திரும்பினார்.

"நீங்க போய் ஷிப் ஆபரேஷனை கவனிங்க... ராம் சின்ஹாவும் நானும்... இங்கே இருக்கோம்.. ஷ்யாம்லாலும் ஹரி சாஸ்திரியும்... ஒவ்வொரு ரூமிலேயும் புகுந்து... ஆட்களையும் போதை மருந்துகளையும் - ரிவால்வர் முனையில் இங்கே கொண்டு வரட்டும்."

"எஸ்.. காப்டன்.."

ஜெகதீஷ் தொப்பியை சரிப்படுத்திக் கொண்டு - போக - தங்கராஜ் ஷ்யாம்லாலையும், ஹரி சாஸ்திரியையும் ஏறிட்டான்.

"ஒவ்வொரு பாஸஞ்சர் அறையா தட்டி... காரியத்தை செயல்படுத்தணும்... ஒரு பாஸஞ்சரை மிரட்டறது- இன்னொரு பாஸஞ்சர்க்கு தெரியக்கூடாது. ஒரே ரூமுக்குள்ளே கணவன், மனைவி இருந்தா... கணவன் கழுத்துல ரிவால்வரை வையுங்க. யாராவது எதிர்த்தாலோ.. தாக்க முயற்சி பண்ணினாலோ... உடனே சுடுங்க... சைலன்ஸர் ரிவால்வர் சத்தமில்லாமே வேலையை முடிக்கும்..."

"எஸ்.. ஸார்.."

"அப்புறம்... ரெண்டு காலி சூட்கேஸ்களை கையோடு கொண்டு போய் - பாஸஞ்சர்ஸ் மறைச்சு வெச்சிருக்கிற ஹெராயினையும், பிரவுன் சுகரையும் உடனடியாக கலெக்ட் பண்ணணும்..."



"எஸ்.. ஸார்.."

"இன்னும் மூணு மணி நேரத்துக்குள்ளே.. சகல காரியமும் நடந்து முடியணும்... விடிந்து வெளிச்சம் வர்றதுக்குள்ளே... நம்ம திட்டத்தோட சங்கதிகள் அத்தனையும் நடந்து - நாம் சாதகமான நிலைமையில் இருக்கணும்..."

"ஸார்.."

"என்ன..?"

"பாஸஞ்சர்ஸை மிரட்ட இந்த ரிவால்வர் உதவாது.. ஸ்டோர் ரூம் அரிசி, கோதுமை மூட்டைகளில் மறைச்சு வெச்சிருக்கிற ஏ.கே. 47 ஐ எடுத்தக்கலாமா?"

"எடுத்துட்டு போங்க.. பட்.. ஒன் திங்க்.. பாஸஞ்சர்ஸ் ரூமுக்கு கொண்டு போகும் போது - மறைச்சு கொண்டு போய் - ரூமுக்குள்ளே போனதும் வெளியே எடுக்கணும்.."

"எஸ்.. ஸார்."

ஹரி சாஸ்திரியும் ஷ்யாம்லாலும் வெளியேறினார்கள். தங்கராஜ், ராம் சின்ஹாவிடமிருந்து - ரிவால்வரை வாங்கிக் கொண்டு சுபாஷ் பிரபலாவிடம் திரும்பினார்.

"ரெண்டு பேரும் எனக்கு முதுகைக் காட்டிட்டு திரும்பி நில்லுங்க."

இருவரும் தயங்கிக் கொண்டே - திரும்பி நின்றார்கள்.

உட்கார்ந்தார்கள்.

"நான் சொல்கிற வரைக்கும்... மறுபடியும் திரும்பிப் பார்க்கக் கூடாது- மீறி திரும்பினா... அடுத்த விநாடியே... தோட்டா பாயும்..."

* * * * *




**IN A SHIP. THE DECK CREW CONSISTS OF ABLE BODIED SEAMEN (A.B'S) AND ORDINARY SEAMEN ON AMERICAN SHPS BOTH GROUPS OF SEAMEN MUST HOLD CERTIFICATES ISSUED BY THE COAST GUARD. ABLE BODIED SEAMEN HAVE MORE EXPERIENCE THAN ORDINARY SEAMEN, AND HAVE THE MORE RESPONSIBLE TASKS... SUCH AS STANDING LOCK OUT AND MAKING RISK REPAIRS.**

ஹரி சாஸ்திரியும், ஷ்யாம்லாலும் நிசப்தமான முதல் டெக்குக்கு வந்து பாஸஞ்சர்ஸ் தங்கியிருந்த வெஸல்ஸ் இருந்த பகுதிக்கு வந்தார்கள். அநேகமாய் எல்லா வெஸல்களிலும் விளக்குகள் அணைக்கப்பட்டிருந்தது. (வெஸல்கள் என்பது பிரயாணிகள் தங்கும் அறைகள்.)

முதல் வெஸலுக்கு முன்பாய் நின்று - இருவரும் கதவைத் தட்டினார்கள். அரை நிமிட நேரத்திற்குப் பிறகு கதவு திறந்தது.

நைட் கவுன் தரித்து ஒரு இளைஞன் நின்றிருந்தான்.

"எஸ்..."



"ஸாரி ஃபார் த டிஸ்டர்பன்ஸ். ட்ரிப் ஷீட்டை சரி பார்க்க வேண்டும்..."

"உள்ளே வாருங்கள்..."

நுழைந்தார்கள்.

ஷ்யாம்லால் கதவைச் சாத்த - ஹரி சாஸ்திரி கேட்டார். "உங்கள் பெயர்..?"

"பெர்னாண்டோ."

"சிங்கப்பூர் எதற்காக போகிறீர்களா?"

"பிசினஸ்..."

"என்ன பிசினஸ்..?"

"உலர்ந்த இறால், மீன்களை டின்களில் அடைத்து..."

ஹரி சாஸ்திரி சிரித்தார்.

"உங்களுடைய உண்மையான பிசினஸைப் பற்றி சொல்லுங்கள்."

"உண்மையான பிசினஸ்? வாட் டூ யூ-மீன்..?"

"உங்களிடம் எத்தனை கிராம் ஹெராயின், எத்தனை கிராம் ப்ரவுன் சுகர் வைத்திருக்கிறீர்கள்..?"

"நோ..."

என்று அலறியவன் வாயில் - ஷ்யாம்லால் சட்டென்று தன் கையில் வைத்திருந்த துப்பாக்கியை திணித்தான்.

"உன்னை சுட்டுக் கொன்று - கடலில் வீசியெறிய முழுசாய் ஒரு நிமிடம் எங்களுக்கு போதும். கஸ்டம்ஸ் அதிகாரிகளுக்கு நீ லஞ்சம் கொடுத்து ஹெராயின் ப்ரவுன் சுகரை பதுக்கிக்

www.cleanindians.com

கொண்டு வந்தது எங்களுக்குத் தெரியும்.. உன் லக்கேஜ்களில் எந்த இடத்தில் அதை மறைத்து வைத்திருக்கிறாய்.."

அவன் கண்களில் கெஞ்சினான்.

"டோண்ட் ஷூட் மீ.."

"கர்த்தரின் ஆசீர்வாதம் உனக்கு இருக்கிறது: எங்களுக்குவேண்டியது உன்னுடைய உயிர் இல்லை. உன்னிடம் இருக்கும்.. ஹெராயின்.. ப்ரௌன் சுகர்.."

"த.. தந்து.. விடுகிறேன்.."

"சீக்கிரம்.. எடு.."

அவன் தன் ப்ரீப் கேஸைத் திறந்து நான்கைந்து தடிமனான காலிகோ பைண்ட் செய்யப்பட்ட புத்தகங்களை எடுத்து நீட்டினான். எல்லாமே கிறிஸ்துவ மத சம்பந்தப்பட்ட புத்தகங்கள்.

"என்ன இது..?"

"காலிகோ பைண்ட் செய்யப்பட்ட இரு அட்டைகளுக்கு நடுவே ஹெராயினும், ப்ரௌன் சுகரும் இருக்கிறது."

"மொத்தம் எவ்வளவு கிராம்..?"

"இருநூறு கிராம்.."

ஷ்யாம்லால் புத்தகங்களின் அட்டைகளைக் கிழித்துக் கொண்டார். "சரி.. எங்களோடு வெளியே வா..?"

"எங்கே..?"

"எதிர்க் கேள்வியெல்லாம் கேட்கக் கூடாது வா.. எங்களோடு."

அவன் வியர்த்துக் கொண்டே



அவர்களுக்கு நடுவே நடந்து ஷிப்பின் கைண்ட் போர்ஷனுக்கு வந்தான். தங்கராஜும், ராம் சின்ஹாவும் ரிவால்வரோடு உட்காந்திருப்பதையும் - எதிரே முதுகுகளைக் காட்டிக் கொண்டு ஒரு ஆணும் பெண்ணும் மண்டியிட்டு உட்கார்ந்திருப்பதையும் பார்த்து திடுக்கிட்டான்.

ஹரி சாஸ்திரி சொன்னார்.

"ஸார்.. இவன் பெர்னன்டோ.. நம்ம முதல் போணி. இந்த காலிகோ பைண்ட் அட்டைகளில் மொத்தம் இருநூறு கிராம்... ஹெராயின், ப்ரௌன்சுகர்.. பதுக்கியிருக்கான்.."

தங்கராஜ் ரிவால்வரை அசைத்து அவனைக் கூப்பிட்டு முன்னால் நிறுத்திக் கொண்டு கேட்டார்.

"உம்பேரு..?"

"பெர்னாண்டோ.."

"எத்தனை வருஷமா இந்த ட்ரக் பிசினஸ்?"

"க.. க.. கடந்த நாலைஞ்சு வருஷமா.."

"சரி... போய்... அவங்க மாதிரியே எனக்கு முதுகு காட்டிக்கிட்டு மண்டிபோட்டு உட்கார். நான் ஏதாவது கேட்டாலொழிய.. நீ பேசக்கூடாது... திரும்பியும் பார்க்கக்கூடாது."

பெர்னாண்டோ... வியர்த்துக் கொண்டே போய் சுபாஷுக்குப் பக்கத்தில் மண்டியிட்டு உட்கார்ந்தான்.

தங்கராஜ் ஹரி சாஸ்திரியையும் ஸ்யாம்லாவையும் ஏறிட்டார். "இன்னும் மூணு மணி நேரத்துக்குள்ளே அத்தனை பேரையும்... இங்கே கொண்டு வந்தாகணும்."

"கொண்டு வந்துடலாம் ஸார்..."

"ட்ரக்ஸை கைப்பற்ற வேண்டியது முக்கியம்... பாஸஞ்சர்ஸ் ட்ரிப் ஷீட்டில் சிவப்புப் புள்ளி வெச்சிருக்கிற... எண்பது பாஸஞ்சஸ்கிட்டே... நிச்சயமா ட்ரக்ஸ் இருக்கு... அவங்ககிட்டயிருந்து... அதை எடுத்தே ஆகணும். அவசரப்பட்டு சுட்டுட வேண்டாம்."

"எஸ்... ஸார்."

இருவரும் மறுபடியும் பாஸஞ்சர் வெஸல்ஸை நோக்கிப் போனார்கள். இரண்டாவது வெஸல் கதவை தட்ட ஆரம்பித்தார்கள்.

* * * * *




**IN A SHIP THE ENGINE ROOM HAS A SEPARATTE ORGANIZATION. IT IS HEADED BY A CHIEF ENGINEER, WHO IS AIDED BY FIRST, SECOND AND THIRD ASSISTANT ENGINEERS.**

**கா**ப்டன் கேபினுக்குள் ரேடியோ ஆப்ரேஷனை கவனித்துக் கொண்டிருந்த ஜெகதீஷ் - அருகிலிருந்த வாக்கி டாக்கி கிணுகிணுத்ததும் ரிஸீவரை எடுத்தார்.



கையிலிருந்து வாட்ச் 12.20ஐ காட்டியது.

ரிஸீவரில் - தங்கராஜ் குரல் கேட்டது.

"ஜெகதீஷ்! ஷிப்பை நேவிகேட் பண்ணிட்டிருங்க... இங்கே எல்லாமே சுமூகமா நடந்துட்டு வருது... நூத்தி பதினாலு பாஸஞ்சர்களில் தொண்ணூற்று ரெண்டு பேரை ஷிப்பின் கைண்ட் போர்ஷனுக்கு கொண்டு வந்தாயிற்று. மண்டி போட்டு உட்கார்த்தி வைக்கப் பட்டிருக்கிறார்கள்."

"ட்ரக்ஸ் எவ்வளவு கிடைச்சது காப்டன்...?"

"இதுவரை பதினேழு கிலோ..."

"இனி திட்டத்தின் அடுத்த கட்டத்தை ஆரம்பித்து விடலாமா...?"

"அதுக்காகத்தான்... இப்ப உங்களை காண்டாக்ட் பண்ணினேன். நீங்க உடனடியா... இண்டியன் கோஸ்ட் கார்ட் நேவியேஷனை வயர்லெஸ்ல காண்டாக்ட் பண்ணி நாம ஏற்கனவே டிடர்மெய்ண் பண்ணியிருந்தபடி... பேசுங்க... பேசும்போது வாய்ஸ் மாடுலேஷன் முக்கியம்..."

"நீங்க கவலையே படாதீங்க காப்டன்... நான் பர்பெக்ட்டா பண்ணி முடிச்சுடறேன்..."

"நீங்க பேசிட்டிருங்க... நான் இப்போ கேபினுக்கு வந்துடறேன்..."

"எஸ் காப்டன்..." சொன்ன ஜெகதீஷ் ரிஸீவரை சாத்திவிட்டு வயர்லெஸ் பாக்ஸைத் திறந்து அதன் கருவிகளை உசுப்பினார். ஹெட்போனை காதில்

மாட்டிக் கொண்டு உருண்டை மைக்கில் கூப்பிட்டார்.

"கோஸ்ட் கார்ட் நேவியேஷன்..."

"பீங்க்.. பீங்க்.. பீங்க்..."

"கோஸ்ட் கார்ட் நேவியேஷன்.. மெட்ராஸ்...?"

"எஸ்..."

"ஹியர்.. மீ..?"

"யா..."

"நான் ஜெகதீஷ்... உதவி காப்டன்... சாம்ராட் ஷிப்..."

"சொல்லுங்கள்..."

"ஷிப் இன் தி ட்ரபுள்..."

"ட்ரபுள்..? என்னவாயிற்று.. வெதர் கண்டிஷன் சரியில்லையா...?"

"அந்த தொந்தரவு இல்லை..."

"பின்னே...?"

"ஷிப்... நான்கு பயணிகளால் கடத்தப்படுகின்றது..."

"என்ன...?" மறுமுனையில் இருந்த கோஸ்ட் கார்ட் அதிகாரி தவிப்பாய் பதட்டமாய் கேட்டுக் கொண்டிருக்கும் போதே ஜெகதீஷ் கர்சிப்பால் வயர்லெஸ் மைக்கை மூடி எட்ட வைத்த நிலையில் குரலை மாற்றி கரகரப்பாய் பேசினார். "கோஸ்ட் கார்ட் அதிகாரி.. அவர்களே! கப்பல் சாம்ராட்டை நானும் எனது நண்பர்களும்... எங்களுடைய கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்திருக்கிறோம்.



ஷிப்பில் இருக்கிற ஊழியர்களின் உயிரும், பிரயாணிகளின் உயிரும் எங்கள் கையில். நாங்கள் நினைத்தால் இந்த சாம்ராட் ஷிப்பை... சின்னச்சின்ன இரும்புத் துண்டுகளாக நொறுக்க முடியும்... அதற்கான டைனமைட்களும் எங்கள் வசம் உள்ளன.. கப்பலும் இங்கே இருக்கிற நூத்து சொச்ச உயிர்களும் காப்பாற்றப்பட வேண்டுமானால்... எங்களுடைய கோரிக்கைகள் இரண்டு நிறைவேற்றப்பட வேண்டும்."

"கோரிக்கைகளா?"

"ஆமாம்.."

"என்னென்ன கோரிக்கைகள்..."

"சென்ற மாதம் பம்பாய் கடற்கரை ரோந்து அதிகாரிகளால் கள்ளக் கடத்தல் குற்றத்திற்காக கைது செய்யப்பட்ட எங்கள் குழுவின் லீடர் மோடியை உடனே விடு தலை செய்ய வேண்டும். இரண்டா வது கோரிக்கை பாம்பே கோஸ்டல் செக்யூ ரிட்டி ஆபீஸர்ஸ் நான்கு பேரை உடன டியாக வேலை நீக்கம் செய்ய வேண்டும்..."

"மறுமுனையில் அதிகாரி பதட்டப் பட்டார். "உங்களுடைய இரண்டாவது கோரிக்கையை வேண்டுமானாலும் பரிசீலிக்கலாம். ஆனால் முதல் கோரிக்கை மிகவும் அபத்தமாக உள்ளதே..?"

"அபத்தமாக...?"

"ஆமாம்... மோடி பதினைந்து நாட்களுக்கு முன்னால் சிறையிலிருந்து தப்பி ஓடிவிட்டானே...?"

"அந்தக் கதையை... நாட்டு ஜனங்களும், பத்திரிகையாளர்களும் வேண்டுமானாலும் நம்பலாம்... நாங்கள் நம்ப மாட்டோம்... மோடி இன்னமும் சிறையில்தான் இருக்கிறார். அவரிடமிருந்து உண்மைகளை வரவழைப்பதற்காக் த்னிமைச் சிறையில் அடைத்து வைத்திருப்பது எங்களுக்குத் தெரியும்... மோடியை இன்னும் ஒருமணி நேரத்தில் விடுதலை செய்ய வேண்டும்... இல்லாவிட்டால் நிலைமை விபரீதமாகும்."

"சொல்வதைக் கேள்... மோடி சிறையிலிருந்து தப்பிவிட்டது உண்மை... அது பொய்க் கதையில்லை... அதிகார பூர்வமாய் அறிவிக்கப்பட்ட செய்தி..."

"நாங்கள் நம்பமாட்டோம்... இன்னும் பத்து நிமிடம் கழித்து வயர்லெஸ்ஸில் தொடர்பு கொள்வோம்... உங்கள் மேலதிகாரிகளோடும், அரசாங்கத்தோடும் கலந்து பேசி - சாதகமான பதிலைச் சொல்லுங்கள்."

வயர்லெஸ்ஸை அணைத்தார் ஜெகதீஷ்.

"வெல்டன்." காப்டன் தங்கராஜ் குரல் கொடுத்துக் கொண்டே உள்ளே வந்தார். "வாய்ஸை மாத்திப் பேசினது உண்மையிலேயே அபாரம்..."

ஜெகதீஷ் சிரித்தார்.

"எல்லாமே உங்க ட்ரெயினிங்தானே காப்டன்..! கள்ளக் கடத்தல் கும்பல் லீடர் மோடி உண்மையிலேயே ஜெயிலிலிருந்து தப்பிவிட்ட விஷயம் எல்லார்க்கும் தெரி



யும். இருந்தாலும் நம்ம முதல் கோரிக்கையே அவங்களாலே நிறைவேத்த முடியாத கோரிக்கையா இருக்கணும்னுதான்... மோடியை ஒப்படைக்கச் சொன்னீங்க..."

"ஜெகதீஷ்! மெட்ராஸ் ஹார்பரிலிருந்து ஷிப் இப்போ எவ்வளவு தூரத்தில் இருக்கு..?"

"அம்பத்தொன்பது கிலோமீட்டர்..."

"இன்னும் ஒரு பத்து கிலோமீட்டர் தூரம்போனதும் நம்ம திட்டத்தோட அடுத்த கட்டத்தை நிறைவேத்தணும்..."

"அடுத்த கட்டம்..?"

ஜெகதீஷ் யோசிக்க -

தங்கராஜ் சொன்னார். "ஷிப்பில் இருக்கிற நமக்கு விசுவாசமில்லாத ஊழியர்கள் பன்னிரெண்டு பேரை - ஷிப்போட மேல்தளத்துல A.K. 47க்கு பலியாக்கி - கடல்ல தள்ளணும்."

"எஸ்... காப்டன்."

* * * * *

TODAY MODERN SHIPS ALSO HAVE HIGHLY AC-




CURATE ELECTRONIC NAVIGATION EQUIPMENT. MANY SHIPS HAVE DEVICES FOR DETERMINING THEIR POSITION THROUGH RADIO SIGNALS. THESE SIGNALS ARE SENT OUT CONTINUOUSLY BY SPECIAL TRANSMITTING STATIONS.

சென்னை துறைமுகம், கோஸ்ட் கார்ட் நேவிகேஷனின் கட்டிடம் அந்த நடு நசி நேரத்தில் அதிகாரிகளால் நிரம்பியிருந்தது. டாக்கிங் பைலட், ஹார்பர் பைலட், கோஸ்ட் கார்ட், சிஃப் செக்யூரிடி ஆபீஸர். அவருடைய அஸிஸ்டெண்ட்கள்.. கடற்படை அதிகாரிகள், சிக்னல் ஆபரேட்டர்கள்.

எல்லோருடைய முகங்களிலும் கவலையோடு கூடிய பயத்தோடு கூடிய அதிர்ச்சி. அந்த நள்ளிரவு நேரத்திலும் சுக்கங்களில் வியர்த்திருந்தனர்.

வயர்லெஸ் பீங்க்..பீங்க்..பீங்க்.' என்று கூப்பிட்டது. கோஸ்ட் கார்ட் அதிகாரி தாவன் ரேடியோவை தட்டிவிட்டு ஹியர் செய்ய ஆரம்பித்தார்.

"ஷிப் சாம்ராட்... ஷிப் சாம்ராட்..."

"எஸ்..." குரல் கரகரத்தது.

"உங்களுடைய முதல் கோரிக்கை நியாயமில்லை. மோடி சிறையிலிருந்து தப்பிவிட்டது. உண்மை. போலீஸார் அவனை தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

"நாங்கள் நம்ப மாட்டோம்."

"இது உண்மை.."

"அரசாங்கத்தின் சார்பாக கூறப்படும் பொய்களில் இதுவும் ஒன்று... மோடி... டெல்லி திஹார் சிறையில்... ஒரு தனியறையில் அடைக்கப்பட்டிருக்கிறார். அவரை விடுதலை செய்தால்தான்.. அந்த சாம்ராட் ஷிப்பும்... பிரயாணிகளும் உருப்படியாக கிடைப்பார்கள்.."

"முட்டாளே! நாங்கள் சொல்வதை



நம்பு! மோடி இந்தியாவின் எந்த சிறையிலும் இல்லை.. அவன் தப்பி விட்டான். உங்களுடைய இரண்டாவது கோரிக்கையை வேண்டுமானால்.. உடனடியாக நிறைவேற்றுவோம்.."

"எங்களுக்கு முதல் கோரிக்கைதான் முக்கியம். மோடியை உடனடியாக விடுதலை செய் செய்து டெல்லி ஏர்போர்ட்டுக்கு கொண்டு வந்து லௌன்ஞ்சில் உட்கார வைக்க வேண்டும். எங்கள் ஆட்கள் அதை பார்த்து விட்டு தகவல் கொடுப்பார்கள். பிறகுதான் இந்த ஷிப்பை விட்டு வெளியே வருவோம்.. இப்போது உங்களை பயமுறுத்துவதற்காகவும் எங்களின் கோரிக்கையை வலியுறுத்துவதற்காகவும். ஷிப்பில் இருக்கும் பதினேழு ஊழியர்களில் பன்னிரெண்டு பேரை கப்பலின் மேல்தளத்தில் வைத்து A.K. 47 ஆல் சுட்டு கடலில் தள்ளப் போகிறோம்

"ஏ..ஏ..ஏய்..ஏய்.."

அதிகாரி தாவன் அலறிக் கொண்டிருக்கும் போதே -

மறுமுனையில் வயர்லெஸ் அணைக்கப்பட்டு ஊமையானது.

* * * * *




MODERN SHIPS ALSO CARRY RADAR. AT NIGHT AND IN BAD WEATHER, A SHIP'S RADAR CAN SPOT ICE BEARS, ROCKS AND OTHER VESSELS IN TIME TO PREVENT A COLLISION.

சாம்ராட் கறுப்புக் கடலில் ஒரு கட்டிடம் மாதிரி நீரைக் கிழித்தபடி போய்க் கொண்டிருக்க கப்பலின் மேல்தளத்தில் அந்த பன்னிரெண்டு ஊழியர்களும் மரண பயத்தோடு வரிசையாய் நின்றிருந்தார்கள்.

எதிரே தங்கராஜ் பக்கத்தில் ஷ்யாம்லால் கையில் ஏ.கே. 47 துப்பாக்கியோடு "ஸாரி ஸீ-மென்! உங்களை இந்த துப்பாக்கி குண்டுகளால் துளைக்க எனக்கு... உடன்பாடு இல்லைதான்... எங்களுக்கு கிடைக்கப் போகிற பெரிய தொகைக்காக... உங்கள் பிணங்களை இந்தக் கடலில் தள்ள வேண்டியிருக்கு... உங்கள் ஆத்மா சாந்தியடைய என்னுடைய இஷ்ட தெய்வத்தை வேண்டிக் கொள்கிறேன்..."

வரிசையில் நின்றிருந்த டெக் ஆபீஸர் ஒருவர் - ஏதோ பேசுவதற்கு முயல தங்கராஜ் புன்னகையோடு கையமர்த்தினார்.

"ஸாரி மிஸ்டர் சமீர்! நீங்க இப்ப எதைப் பேசினாலும் அதை நான் கேக்கக் கூடிய நிலைமையில் இல்லை. நீங்க சாகப் போவது... பத்து நாட்களுக்கு முன்பே... எங்களால் முடிவு செய்யப்பட்ட விஷயம். எங்க திட்டத்தோட ஒரு கட்டம் இது."

ஷ்யாம்லால் ஏ.கே. 47ஐ சுடுவதற்கு வசதியாக ஏற்றிக் கொண்டார். பன்னிரெண்டு பேரும் மிரண்ட விழிகளோடு 'கன்'னின் வாயையே பார்க்க தங்கராஜ் 'சுடு' என்பதற்கு அடையாளமாய் தலையை அசைத்தார்.



அதே விநாடி -

அவருடைய கோட்டின் இடது பாக்கெட்டில் இருந்த வாக்கி டாக்கி 'பீங்க்... பீங்க்... பீங்க்...' என்று கூப்பிட்டது.

அதை எடுத்து காதுக்குக் கொடுத்தார்.

கீழே காப்டன் கேபினிலிருந்து ஜெகதீஷ் பேசினார்.

"ஸார்... நம் ஆட்களை சுட்டு விட்டீர்களா?"

"இல்லை... ஏன்?"

"அவர்களுடைய உயிர்களை பறிப்பது கடைசியாக வைத்துக் கொள்ளலாம் என்பது என் எண்ணம்."

"காரணம்...?"

"எப்படியும் பாஸஞ்சர்ஸ் அனைவரையும் விடிவதற்குள் தீர்க்கப் போகிறோம் இல்லையா?"

"ஆமாம்..."

"அப்படி தீர்க்கப்பட்டு கப்பலின் தளத்திற்குள் பிணமாக விழுவர்களை தூக்கி கடலில் போட ஆட்கள் வேண்டாமா? நம் ஐந்து பேரால் இது முடிகிற காரியமில்லை. நான் காபின் அறைக்குள் இருக்க வேண்டும். பாஸஞ்சர்களை துப்பாக்கி முனையில் வைத்திருக்க கீழ் தளத்தில் இரண்டு பேர் வேண்டும்... மீதி இருக்கிற இரண்டு பேரால்... பிணங்களை அப்புறப்படுத்தும் வேலையை கவனிக்க முடியாது. அதனால்..."

"அதனால்..."

"பாஸஞ்சர்களை பத்து பத்து பேராய் கப்பலின் மேல் தளத்துக்கு கொண்டுபோய் சுட்டுத்தள்ளுகிற வேலையை ஆரம்பியுங்கள். விழுகிற பிணங்களை நம் சகாக்கள் பன்னிரெண்டு பேர்.... தூக்கி கடலில் எறிகிற வேலையைச் செய்யட்டும். கடைசியில் அவர்களை தீர்த்துக் கட்டுங்கள்."

தங்கராஜ் புன்னகைத்தார்.

"சமயத்தில் சௌன்ன் யோசனை இது.. அப்படியே செய்து விடலாம்." வாக்கி டாக்கியை அணைத்து விட்டு எதிரே நின்றிருந்த ஸீ மென்களை ஏறிட்டார்

"நீங்கள்... பன்னிரெண்டு பேரும்... எங்கள் ஐந்து பேர்க்கு உதவியாக இருப்பீர்களா..?"

அவர்கள் ஒட்டுமொத்தமாய் மலர்ந்தார்கள்.

"நிச்சயமாய்.."

"நீங்கள் செய்ய வேண்டிய முதல் வேலை... இதுதான். நாங்கள் இன்னும் சிறிது நேரத்தில் - பாஸஞ்சர்களை பத்து பத்து பேராய் - இந்த தளத்திற்கு கொண்டு வந்து சுட்டுத் தள்ளுவோம்... பிணங்களை கடலில் தூக்கி எறிந்து அப்புறப்படுத்தும் வேலை உங்களுடையது... செய்வீர்களா?"

"செய்வோம்..! நீங்கள் எதைச் சொன்னாலும் செய்யக் காத்திருக்கிறோம்."

தங்கராஜ் மறுபடியும் வாக்கி டாக்கியை எடுத்து கீழ் தளத்தில் இருந்த



ஹரி சாஸ்திரியை தொடர்பு கொண்டார்.

"நம் திட்டத்தில் ஒரு சின்ன மாற்றம். நீமே வரும் போது நேரில் சொல்கிறேன். இப்போது போதை மருந்து கடத்திய எண்பது பிரயாணிகளில் முதல் பத்து பேரை மேல் தளத்துக்கு ஓட்டிக் கொண்டு வாருங்கள்... ராம் சின்ஹா அங்கேயே இருக்கட்டும்.."

"எஸ்... காப்டன்..! பத்து பேரை இப்போதே கூட்டிக் கொண்டு வரட்டுமா..?"

"உடனே.."

"உங்களிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டும்."

"என்ன?"

"பயணிகளில் ஒருவனான அந்த இண்டர்நேஷனல் ஸ்விம்மர் சரண் மாத்தூர் எதிர்த்து பேசுகிறான். மண்டி போட்டு உட்கார்ந்திருப்பவன்.. அடிக்கடி திரும்பிப் பார்த்து முணுமுணுக்கிறான்.."

"போதை மருந்து கடத்தியவர்களின் லிஸ்டில் அவன் இருக்கிறானா?"

"இல்லை.."

"ஏ.கே. 47 தோட்டவை அவனுக்கு சீக்கிரமே கொடுத்து விடலாமா..?"

"கொடுத்து விடலாம்.."

"அப்படியானால்... முதல் பத்து பேரோடு சேர்த்து அவனையும் கொண்டு வாருங்கள். தோட்டாக்களால் துளைத்து விடலாம்.."

"எஸ்.. காப்டன்.."

வாக்கி டாக்கியை நிசப்தமாக்கிய -

இரண்டாவது நிமிஷம் -

முதல் தளத்தில் அந்த பதினோரு பேர்களையும் மேய்த்துக் கொண்டு வந்து நிறுத்தினான் ஹரி சாஸ்திரி. எல்லோரும் தலைக்குப் - பின்னால் கைகளை கோர்த்திருந்தார்கள்.

தளத்தில் நிசப்தம்.

தங்கராஜ் எழுந்து பூட்ஸ் ஒலிக்க நான்கடிகள் நடந்து நின்று குரல் கொடுத்தார். "சரண் மாத்தூர்! ஒன் ஸ்டெப் பார்வேர்ட்.."

வரிசையில் ஐந்தாவதாய் நின்றிருந்த சரண் மாத்தூர் ஒரடி முன்னால் வந்தான். தங்கராஜ் புன்னகையோடு கேட்டார்.

"என்ன.. இண்டர்நேஷனல் ஸ்விம்மர்.. கீழே துள்ளினாயாமே?"

"நீங்கள் இந்த கப்பலுக்கு காப்டனா..? இல்லை கொள்ளைக்காரனா . என்று கேட்டேன்.. அவ்வளவுதான்.."

"நீ அப்படி கேட்டதினால்... இப்போது அவசரமாக சாகப் போகிறாய்...! போய் வரிசையில் நில்.. ஏ.கே. 47ன் துப்பாக்கி தோட்டாக்களை வாங்கிக் கொண்டு கடலில் பிணமாய் மிதக்க என் வாழ்த்துக்கள்.."

பதினோரு பேரும் வரிசையாய் நிறுத்தப்பட்டார்கள். ஷ்யாம்லால் ஏ.கே. 47ன் டிரிக்கரை விடுவித்து சற்று



பின்வாங்கி நின்று ட்ரிக்கரை இயக்கினான். தோட்டாக்கள் பாய்ந்தது"

டகுடகுடகுடகுடகு.."

ஐந்து விநாடி நேரம் கூட இல்லை.

விதவிதமாய் துள்ளிய பதினோரு பேரும் ரத்தமாய் சரிந்தார்கள். அடங்கினார்கள். தங்கராஜ் மெல்ல நடந்து வந்து ஏறக்குறைய ரத்தத்தில் குளித்து கண்கள் வெறித்த நிலையில் கிடந்த சரண் மாத்தூரை பூட்ஸ்காலால் புரட்டினார். உயிரற்ற உடல் சலனமின்றி மல்லாந்தது.

"இண்டர்நேஷனல் ஸ்விம்மிர்க்கு என் ஆழ்ந்த அனுதாபங்கள்" தொப்பியைக் சுழற்றி கொண்டு சிரித்தார்.

"ஸீ..மென்.."

"ஸார்..."

"ஒவ்வொரு பிணமாய் எடுத்து - கடலுக்குள் தூக்கி எறியுங்கள்."

அவர்கள் செயல்பட்டார்கள்.

* * * * *




WHEN A LARGE SHIP LEAVES PORT THREE OR FOUR SMALL TUG BOATS PULL THE VESSEL FROM THE PIER INTO THE HARBOUR - A DOCKING PILOT DIRECTS THE TUGS AND THE SHIP UNTIL THE VESSEL CLEARS THE PIER AND IS UNDERWAY IN THE HARBOUR.

**கா**பின் உள்ளே - வயர்லெஸ்ஸில் மெட்ராஸ் கோஸ்ட் கார்ட் அதிகாரியோடு பேசிக் கொண்டிருந்தான் ஜெகதீஷ். குரலில் வரவழைத்துக் கொண்ட பதட்டம்.

"கோஸ்ட் கரர்ட் நேவியோஷன்...! இங்கே நிலைமை மோசம். கப்பலை கைப்பற்றிக் கொண்ட அந்த நான்கு நேரும் - பயணிகளை துன்புறுத்துகிறார்கள். இதுவரை இருபத்தியோரு பயணிகளை ஏ.கே. 47 ரக துப்பாக்கியால் சுட்டுக் கொன்று விட்டார்கள்.. பயணிகளின் பிணங்களை கடலில் தூக்கி எறிந்து-ஹ..!" அடிபட்டவர் போல் அலறிய ஜெகதீஷ் - சற்று இடைவெளி விட்டு மைக்கின் மேல் துணியை போர்த்தி குரலை மாற்றிக் கொண்டு ஒரு கடத்தல்காரனைப் போல் பேச்சைத் தொடர்ந்தார். "கோஸ்ட் கார்ட் அதிகாரி அவர்களே" எங்கள் கோரிக்கைகள் என்னவாயிற்று...? மோடியின் விடுதலையைப் பற்றி உங்கள் மேலதிகாரிகளோடு பேசினீர்களா..?"

வயர்லெஸ் கரகரத்தது. "நாங்கள் சொல்வது உண்மை.. மோடி ஜெயிலிருந்து தப்பி இன்றைக்கு பதினைந்து நாட்கள் ஆகிறது.."

"எத்தனை தடவைதான் இதே பொய்யை திரும்பத் திரும்ப சொல்வீர்கள் நீங்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற தாமதம் காட்டும் ஒவ்வொரு நிமிஷமும்.. பயணிகளின் உயிர்க்கு ஆபத்து.. கப்பலில் இருக்கும் ஊழியர்களுக்கும் ஆபத்து. கப்பல் காப்டன் தங்கராஜை கொடிக் கம்பத்தில் ஏற்றி தொங்கவிடப்



போகிறோம்.."

"யாரையும்.. எதுவும்.. செய்யாதீர்கள்.."

"உங்களுக்கு இன்னமும்.. அரைமணி நேர அவகாசம்...! மோடி விடுதலையாகிவிட்டதாக... எங்களுக்கு தகவல் தர வேண்டும். இந்த அரை மணி நேரத்திற்குள் தகவல் வரவில்லையென்றால்... மேலும் பத்து பேரை ஏ.கே. 47க்கு பலியாக்குவோம்..." "சொல்லிவிட்டு வயர்லெஸ்ஸை அணைத்தார் ஜெகதீஷ்.

அருகிலிருந்த வாக்கி டாக்கியை எடுத்து பட்டனைத் தட்டிவிட்டு மேல் தளத்தில் இருந்த தங்கராஜோடு தொடர்பு கொண்டார்.

"மெட்ராஸ் கோஸ்ட் கார்ட் அதிகாரிகளோடு தொடர்பு கொண்டேன் காப்டன்.."

"என்ன சொல்கிறார்கள்?"

"அரண்டு போயிருக்கிறார்கள்.. மேல் தளத்தில் நிலைமை எப்படி...?"

"மூன்றாவது அணி.. சாவதற்காக வந்து கொண்டிருக்கிறது. இந்த அணியில்.. சுபாஷ் பிரபலா இரண்டு பேரும்.. இடம் பெறுகிறார்கள்."

"நான் அவர்களை விசாரித்ததாக கூறுங்கள் காப்டன்.."

"கண்டிப்பாய்.."

வாக்கி டாக்கிகள் சிரிப்பில் அதிர்ந்தன

★ ★ ★ ★ ★



# 10

IN A SHIP CHART ROOM HAS VARIOUS AIDS TO PLOT A SHIP'S COURSE AND POSITION. ONE DEVICE REPRODUCES WEATHER CHARTS BY RADIO.

மெட்ராஸ் கோஸ்ட் கார்ட் நேவியேஷன்.

கருநீல யூனிஃபார்ம் அணிந்த - உயர திகாரிகள் வட்ட மேஜையைச் சுற்றி உட்கார்ந்து கொண்டு நெற்றிகளை சுருக்கிக் கொண்டு கவலையாய் பேசினார்கள். யோசனைகள் சொன்னார்கள்.

"விமானத்தின் மூலம் ஒரு அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டால் என்ன?"

"அது சாத்தியமில்லை..."

"எப்படி சொல்கிறீர்கள்..?"

"சாம்ராட் கப்பலை கடத்துபவர்கள்.. எந்த நிமிடத்திலும் எங்களால் கப்பலை நொறுக்க முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். விமானம் வருவதை அறிந்து... அவர்கள் செயல்பட்டால்... கப்பலையும் நாம் முழுமையாக பார்க்க முடியாது. பயணிகள், கப்பல் 'ஊழியர்களையும்.. உயிரோடு மீட்க முடியாது..."

"அப்படியானால் வேறு என்ன நடவடிக்கையைத் தான் எடுப்பது...? கடத்தல்காரர்களின் கோரிக்கை



பைத்தியக்காரத்தனமாக இருக்கிறது... ஜெயிலிலிருந்து தப்பியோடி விட்ட மோடியை.. கேட்கிறார்கள்..."

"இதுவரைக்கும் இருபத்தியோரு பயணிகளை சுட்டுக் கொன்றிருக்கிறார்கள். அதில் இண்டர்நேஷனல் ஸ்விம்மர் சரண் மாத்தூரும் ஒருவர்.. கப்பல் காப்டன் தங்கராஜை - கொடி மரத்தில் தலைகீழாக ஏற்றித் தொங்க விடப் போகிறார்களாம்..."

"இப்படி நாம் பேசிக் கொண்டிருப்பதில் பிரயோஜனமில்லை.. தந்திரமாக எதையாவது செய்துதான் கப்பலை மீட்க வேண்டும்.. எனக்குள் ஒரு யோசனை."

"சொல்லுங்கள்..."

"விமானத்தில் ஒரு அதிரடி நடவடிக்கைகள் மேற்கொண்டால் தான் ஆபத்து. அதே அதிரடி நடவடிக்கையை சப்-மெரீன் ஐ.என்.எஸ். சக்ராவை அனுப்பி மேற்கொள்ளலாமே..."

அதிகாரிகளிடையே நிசப்தம்.

யோசனை சொன்ன அதிகாரியே அந்த நிசப்தத்தை கலைத்தார். "ஐ.என்.எஸ்.. சக்ரா சப்மெரீன் வெகு ஆழத்தில் நீர்க்கு அடியில் வேகமாய் செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டது. இதன் மூலம் ஒரு அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டால் நிச்சயம் சாம்ராட் கப்பலை மீட்க முடியும்..."

"சதர்ன் நேவல் 'கமாண்டிடம் இதற்கான உத்தரவை வாங்கி கொச்சி

யிலிருந்து ஐஎன்எஸ். சக்ராவை அனுப்ப வேண்டும். இதற்கு கால தாமதம் ஆகுமே?"

"போர்க்கால நட்வடிக்கையாக மேற்கொள்ள வேண்டியதுதான்... அட்மிரல் ஆஃப் த ஃப்ளிட்டுக்கு உடனடியாக தகவல் அனுப்பி..."

"பீங்க்... பீங்க்..."

வயர்லெஸ் கூப்பிட்டது.

"அந்த மடையர்களிடமிருந்து தான்..." - அதிகாரி தாவன் வேகவேகமாய் போய் தொடர்பு கொண்டார்.

"திஸ் ஈஸ் கோஸ்ட் கார்ட்..."

"என்ன மோடி... விடுதலை செய்யப்பட்டு விட்டாரா?"

"சிறையில் இல்லாத மோடியை... எப்படி விடுதலை செய்ய முடியும்?"

"பிடிவாதம் பிடிக்கிறீர்களே...?"

"பிடிவாதம் பிடிப்பது நாங்கள் இல்லை... நீங்கள்தான்... உங்களுடைய இரண்டாவது கோரிக்கை நிறைவேற்றப்பட்டு விட்டது."

"எங்களுக்கு முதல் கோரிக்கை தான் முக்கியம். மோடி விடுதலை செய்யப்பட வேண்டும்... இந்திய டெல்லி அரசாங்கம் உங்களை ஏமாற்றுகிறது. மோடி டெல்லி திஹார் சிறையில் இருப்பது... எங்களுக்குத் தெரியும். மோடியை ரகசியமாய் தீர்த்துக் கட்ட இந்த அரசாங்கம் முயற்சிக்கிறது. அவரை கோர்ட்டுக்கு கொண்டு வந்தால்



சில மந்திரிகளும், அரசாங்கத்துக்கு வேண்டிய தொழிலதிபர்களும்... பாதிக்கப் படுவார்கள் என்கிற காரணத்துக்காக மோடி சிறையிலிருந்து தப்பிவிட்டது போல் - புரளியைக் கிளப்பி விட்டுட்டு... சில நாள் கழித்து அவரை... தீர்த்துக் கட்டி விட திட்டம் தீட்டியிருக்கிறது..."

"பொய்..."

"பொய்யோ... உண்மையோ... எங்கள் குழுவின் தலைவர் மோடி எங்களுக்கு வேண்டும்... கொடுத்த அரை மணி நேர அவகாசம் முடிகிறது... மேலும் ஒரு பத்து பேரை... சுட்டு கடலில் தள்ளப் போகிறோம்..."

"வேண்டாம்..."

"வேண்டாமென்றால்... எங்களுக்கு மோடி வேண்டும்."

"நாங்கள் அரசாங்க அதிகாரிகளோடு பேச வேண்டும். நீங்கள் மோடியைப் பற்றி சொன்ன தகவல்கள் உண்மையானவையா என்று விசாரிக்க வேண்டும். நிலைமையை எடுத்துக் கூற அவகாசம் வேண்டும்..."

"அவ்காசமென்றால் எவ்வளவு?"

"விடியும் வரை..."

"அதாவது காலை ஆறுமணி வரை..."

"ஆமாம்..."

"இது அதிகமான அவகாசம்... மெட்ராஸிலிருந்து டெல்லிக்கு ஹாட்லைன் மூலம் டெலிபோனில் அதிகாரிகளைத் தொடர்பு கொள்ள

உங்களுக்கு இரண்டே நிமிஷம் போதும்."

"தொடர்பு கொள்ள இரண்டு நிமிஷம் போதும்.. ஆனால் உங்கள் கோரிக்கையை எடுத்துச் சொல்லி மோடி உண்மையிலேயே சிறையில் இருந்தால் அவரை வெளியே கொண்டுவர ஏற்பாடு செய்ய வேண்டாமா?"

"அதற்காக விடியும் வரை அவகாசம் தரமாட்டோம்.. வேண்டுமானால் ஒரு ரெண்டு மணி நேரம்.. தருகிறோம்.."

"போதும்..! இந்த அவகாசம் போதும்.. உங்கள் கோரிக்கையை செயல்படுத்த நாங்கள் முழு முயற்சி எடுத்துக் கொள்வோம்.."

"இப்போது நேரம் சரியாக 12.45.. 2.45 வரைக்கும்.. பயணிகளையும், கப்பல் ஊழியர்களையும்.. கொல்லாமல் வைத்திருப்போம்.. எங்கள் கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால் 2.46க்கு எங்கள் அழிவு வேலையை ஆரம்பிப்போம்.." மறுமுனையில் வயர்லெஸ் அணைக்கப்பட்டது.

* * * * *




SUB MARINE: THE HULL OF A SUB MARINE IS A CIGAR - SHAPED CYLINDER OF STEEL, STRONG ENOUGH TO WITH STAND THE PRESSURE OF THE SEA WHEN SUBMERGED TO ITS PERMITTED DEPTH. THIS HULL IS DIVIDED INTO WATER TIGHT



COMPARTMENTS DESIGNED TO WITHSTAND THE SAME PRESSURE AS THE HULL.

ஹரி சாஸ்திரி கையில் வைத்திருந்த ஏ.கே. 47ன் நீண்ட இரும்பு மூக்கால் சுபாஷின் விலாவிலும், பிரபலாவின் விலாவிலும் இடித்தார்.

"ம்.. கெட்.. அப்.. ஐ.. ஸே.."

இருவரும் தட்டுத் தடுமாறிக் கொண்டு எழுந்தார்கள்.

"நடங்க.."

துப்பாக்கி முனையில் தள்ளிக் கொண்டு போனார். மேல் தளத்தின் படிகளில் ஏற வைத்து தங்கராஜுக்கு முன்பாக கொண்டு வந்து நிறுத்தினார்.

பயணிகளில் எட்டு பேர் கடப்படுவதற்காக டெக் ஓரமாய் நிறுத்தப்பட்டிருந்தார்கள். அவர்களுக்கு எதிரே ஷ்யாம்லால் துப்பாக்கியை ஏந்தியபடி தெரிந்தான். தலைக்கு மேலே கறுப்பு வானத்தில் கொள்ளை கொள்ளையாய் நட்சத்திரங்கள் இறைக்கப்பட்ட சோற்றுப் பருக்கைகளாய் தெரிந்தன. கடல்காற்று வேகமாய் அடிப்பதும் தணிந்து போவதுமாய் இருந்தது.

தங்கராஜ் கண்ணைச் சிமிட்டியபடியே சுபாஷையும் பிரபலாவையும் பார்த்து கேட்டார்.

"என்ன அண்ணன் தங்கச்சி.. எப்படி இருக்கீங்க...?"

சுபாஷ் கையெடுத்துக் கும்பிட்டான்.

"காப்டன்! எங்களை ஒண்ணும் பண்ணிடாதீங்க..."

"அதாவது சுட்டுடாதீங்கன்னு சொல்றே.."

"ஆமா.."

"உங்களை சுட்டுத் தள்ளாமே என்ன பண்றது..? எங்க திட்டப்படி எங்க அஞ்சு பேரைத் தவிர - இந்த ஷிப்பில் வேற யாரும் உயிரோடு இருக்கக் கூடாதே..?"

"காப்டன்! எங்களை உயிரோடு விட்டுட்டா... ஊர் திரும்பியதும் வேண்டிய பணம் உங்களுக்கும் உங்க ஆட்களுக்கும் தர்றோம்.."

"உன்னை நம்ப முடியுமா.. சுபாஷ்..? நீ எப்பேர்ப்பட்ட பேர்வழின்னு எனக்குத் தெரியும்.. நீயும் உன் தங்கச்சியும்... இந்த கள்ளக் கடத்தல் தொழிலில் எத்தனை தடவை பழம் சாப்பிட்டு கொட்டை போட்டிருக்கீங்கன்னு எனக்கு நல்லாவே தெரியும்... உன்னோட பூர்வீகம் 'பர்மா'ங்கிறதும்.. அங்கே கடற்படையைச் சேர்ந்த ஒரு வைஸ் அட்மீரலை கொலை பண்ணிட்டு... இந்தியாவுக்கு ஓடி வந்தவன்கிறதும் எனக்குத் தெரியும்.. உன்னோட தங்கச்சி உனக்கு மேலே கைகாரி... தன் அழகான உடம்பை அடமானம் வெச்சே.. எத்தனை கடத்தல் புள்ளிகளை... வளைச்சு போட்டிருக்காங்கிற விபரமும் எனக்குத் தெரியும்.."

"காப்டன்..!"



தங்கராஜ் சிரித்தார்.. "அனுபவிச்சது போதும்.. சுபாஷ்..! நீயும் பிரபலாவும் செத்து போயிடறது பெட்டர்... அண்ணனும் தங்கச்சியும் ஒண்ணா ஒரே நேரத்துல செத்துப் போயிடறது எவ்வளவு பெரிய பாக்கியமான விஷயம் தெரியுமா..?"

"டேய்ய்ய்ய்.."

சுபாஷ் வீறிட்டுக் கத்திக்கொண்டே - திடும்மென்று தங்கராஜ் மேல் பாய்ந்தான். அவனுடைய கைகள் தங்கராஜின் மேல் படும் முன்பு ஹரி சாஸ்திரியின் கையிலிருந்த ஏ.கே. 47 கனைத்தது.

"டகடகடக.."

தோட்டாக்கள் அவனைக் குதற சுபாஷ் துள்ளி விழுந்து மல்லாந்தான். பிரபலா அலறிக் கொண்டு அண்ணனின் மேல் விழ ஏ.கே. 47ளின் தோட்டாக்கள் அவளையும் மொய்த்தது.

டெக் பூராவும் ரத்தத்துளிகள் உற்சாகமாய் சிதறிய அதே விநாடி -

தங்கராஜின் கோட் பாக்கெட்டில் இருந்த வாக்கி டாக்கி கூப்பிட்டது "பீங்க்.. பீங்க்.."

எடுத்து பட்டனைத் தட்டி காதுக்கு பொருத்தினார்.

கீழேயிருந்த ராம் சின்ஹா - பதட்டமாய் - ஆனால் மெல்லிய குரலில் பேசினான். "காப்டன்! ஹரி சாஸ்திரியை உடனே கீழே அனுப்புங்கள்."

"ஏன் என்ன விஷயம்..?"

என் கையில் இருக்கும் ஏ.கே. 47னில் ஏதோ கோளாறு.. இயங்கவில்லை"

தங்கராஜ் அதிர்ந்தார். லேசாய்.

"என்ன?"

"விஷயம் வெளியே வருவதற்கு முன்... அதை சரிப்படுத்த வேண்டும். ஆனால் முடியுமென்று... தோன்றவில்லை.. ஹரி சாஸ்திரியை உடனே அனுப்புங்கள்..."

* * * * *



## 12

**IN A SIP ON THE DECK ARE SQUARE OR RECTANGULAR HOLES CALLED HATCHES. THESE ARE CLOSED WATER THIGHT BY HATCH COVERS. WHEN THE HATCH - COVERS ARE OPENED ONE SEE RIGHT INTO THE HOLDS, WHERE CARGO IS STOWED. THE SHIP'S FRONT END HAS A RAISED PLATRORM CALLED THE**

சென்னை.

கேரஸ்ட் கார்ட் அதிகாரி தாவன் டெலிபோனில் டெல்லி பாதுகாப்பு அமைச்சக செயலாளரோடு குரல் எக்கி பேசிக் கொண்டிருந்தார்.

"ஸார்... யூ...ஆர்... கரெக்ட்... மோடி சிறையிலிருந்து தப்பி விட்டது உண்மை தான்.. ஆனால் கப்பலை கடத்தியிருக்கிற ஆசாமிகள்... இதை நம்பவில்லை. மோடியை தனிமைச் சிறையில் அடைத்து வைத்திருப்பதாக எண்ணிக்



கொண்டிருக்கிறார்கள்."

"முட்டாள்கள்..."

"அவர்களை இப்படி திட்டிக் கொண்டிருப்பது.. பிரயோஜனமில்லை ஸார். பிரயாணிகளையும்.. நேவி க்ரூஸையும் காப்பற்ற வேண்டும்... ஐ.என்.எஸ். சக்ரா சப்-மெரீனை அனுப்பி அதிரடி நடவடிக்கையில் ஈடுபடுத்த வேண்டும்.."

"அவர்கள் எத்தனை மணி நேரம் அவகாசம் கொடுத்திருக்கிறார்கள்..?"

"இரண்டு மணி நேரம்.."

"உயிர்ச்சேதம் இதுவரைக்கும் எவ்வளவு..?"

"இருபத்தியோர் பேர்... அதில் இண்டர்நேஷனல் ஸ்விம்மர் சரண் மாத்தூரும் ஒருவர்.."

"கடத்தல் காரர்கள் யார்..?"

"வைஸ்-காப்டன் ஜெகதீஷ் ஸ்டேட்மெண்ட்படி கடத்தல்காரர்கள் மொத்தம் நான்கு பேர் என்பதும்.. அந்த நான்கு பேரும் பயணிகளோடு கலந்திருந்தவர்கள் தான் என்று தெரிய வருகிறது.."

"சரி... கொச்சி நேவல் ஸ்டேஷனை தொடர்பு கொண்டு ஐ.என்.எஸ். சக்ரா சப் மெரீனுக்கு ஏற்பாடு செய்கிறேன்.."

"தாங்க்யூ.. ஸார்."

"ஷிப் ஸாம்ராட் பற்றிய செய்திகளை உடனுக்குடன் அமைச்சத்திற்கு

தெரிவியுங்கள்..."

"எஸ்... ஸார்..."

"கடத்தல்காரர்கள் அடுத்த தடவை வயர்லெஸ்ஸில் தொடர்பு கொண்டு பேசினால்... கொஞ்சம் சாதுர்யமாக பேசுங்கள். மோடியை விடுதலை செய்வதற்கான ஏற்பாடுகளில் அரசு இருப்பதாக சொல்லுங்கள். அடுத்த இரண்டு மணி நேரத்தில் ஐ.என்.எஸ். சக்ரா... ஸாம் ராட்டை நெருங்கிவிடும்..." பாதுகாப்பு அமைச்சகத்தைச் சேர்ந்த அந்த அதிகாரி உற்சாகமாய் பேசிக் கொண்டே போனார்.

★ ★ ★ ★ ★




**EVERY SHIP CARRIES A PORT AND A STAR BOARD ANCHOR IN ITS BOWS. AN ANCHOR IS A HEAVY METAL PIECE, WEIGHING SEVERAL TONS, WITH TWO HOOK LIKE ARMS AT THE END. WHEN THE CAPTAIN ORDERS 'DROP ANCHOR' THE ANCHOR DROPPED INTO THE SEA AT THE END OF A LONG CABLE.**

**கா**ப்டன் தங்கராஜ் ஹரிசாஸ்திரியோடு மேல் தளத்திலிருந்து கீழே இறங்கி வந்து ராம் சின்ஹாவை நெருங்கினார். ராம் சின்ஹா கையில் ஏ.கே. 47ஐ வைத்துக் கொண்டு வியர்த்த முகத்தோடு உட்கார்ந்திருக்க அவருக்கு முன்னால் எட்டு வரிசைகளில் பயணிகள் முதுகுகளைக் காட்டிக் கொண்டு



மண்டியிட்டு உட்கார்ந்திருந்தார்கள். தங்கராஜைப் பார்த்ததும் ராம் சின்ஹா எழுந்தார். ஹரிசாஸ்திரி அந்த இடத்தில் உட்கார்ந்து கொள்ள தங்கராஜ் ராம் சின்ஹாவை கூட்டிக் கொண்டு உள்ளே இருந்த ஒரு கேபினுக்கு போனார்.

"என்னாச்சு...?"

"திடீர்ன்னு ஏ.கே. 47 ஒர்க் பண்ணலை ஸார்..."

"எப்படி...?" சின்ஹாவின் கையிலிருந்த மெஷின் கன்னை வாங்கிச் சோதித்தார். முகம் இருண்டது.

"மை குட்னஸ்."

"என்ன ஸார்...?"

"லீவர் போச்சு..."

"அப்படியானால்... இது முடம். பிரயோஜனப் படாது..."

"இதை கையில் வைத்துக் கொண்டு வெறுமனே மிரட்டலாம்..."

"மீதமுள்ள இரண்டு 'கன்'களை வைத்துக் கொண்டுதான் அத்தனை பேர்க்கும் கபால மோட்சம் கொடுக்க வேண்டும்..."

"தோட்டாக்களையும் சிக்கனமா பயன்படுத்தணும்..."

"சின்ஹா... நீங்க... ஹரிசாஸ்திரிக்கு பக்கத்திலேயே இந்த ஏ.கே. 47ஐ வெச்சுக்கிட்டு நில்லுங்க. இது முடம்ன்னு யார்க்கும் தெரியக்கூடாது..."

"எஸ்... ஸார்..."

"நீங்க போங்க... நான் ஜெகதீஷை பார்த்துட்டு வர்றேன்." சொன்ன தங்கராஜ் அந்த குறுகலான ட்யூப் வரந்தாவில் நடந்துபோய் காப்டனின் காபினுக்குள் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே போனார்.

ஆச்சரியப்பட்டார்.

காபினுக்குள் ஜெகதீஷ் இல்லை.

கருவிகள் மட்டும் இயக்கத்தில் இருப்பதற்கு அடையாளமாய் - நிறம் நிறமாக பல்புகளோடு ஒளிர்ந்து கொண்டிருந்தன. என்ஜின் ஜிம்ம்ம் என்ற ரீதத்தோடு ஓடிக் கொண்டிருந்தது.

"ஜெகதீஷ்"

தங்கராஜ் குரல் கொடுத்துக் கொண்டே - காபினுக்குள்ளிருந்த மற்ற அறைகளில் கதவுகளைத் திறந்து பார்த்தார்

எல்லாமே வெறிச்சிட்டது.

"ஜெகதீஷ் எங்கே போனார்...?"

யோசனையில் கன்னத்தை தேய்த்துக் கொண்டு திரும்பியவர் திடுக்கிட்டார் புருவங்கள் ஆச்சரியமாய் மேலே உயர்ந்தன.

* * * * *



## 14

**WHEN A SHIP BERTHS: SURPRISINGLY IT IS ONLY WHEN A SHIP ENTERS THE SHALLOW WATERS**



**OF ESTUARIES, RIVERS AND OTHER PORT APPROACHES THAT SHE IS MOST VULNERABLE AND NOT WHEN SHE IS FAR OUT IN THE DEEP OCEAN.**

கொச்சி, சதர்ன் நேவல் கமாண்ட் துறையின் கட்டிடம். கட்டிடத்தின் ஒரு பிரத்யேக அறையில் ரியர் அட்மிரலுக்கு எதிரில் கேப்டன் ராகுலும்கமாண்டர் பாலச்சந்திரனும் நின்றிருந்தார்கள். யூனிபார்மில் உத்யோகப்பட்டைகள் மின்னின.

ரியர் அட்மிரல் சொல்லிக் கொண்டிருந்தார். "இன்னும் பத்து நிமிடங்களில் ஐ.என்.எஸ். ச்க்ராவில் அதிரடிப் படை வீரர்களோடு பயணம் மேற்கொள்ளப் போகிறீர்கள். இது சாதாரண பயணமில்லை... நூற்று சொச்ச உயிர்களையும் சேதமில்லாமல் சாம்ராட் ஷிப்பையும் மீட்கப் போகின்ற உன்னதமான பொறுப்பு வாய்ந்த பயணம். சாம்ராட் ஷிப்பில் இருக்கும் கடத்தல்காரர்கள் - தங்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற இரண்டு மணி நேரம் அவகாசம் கொடுத்திருக்கிறார்கள். அந்த அவகாசத்தில் இப்போதே பதினைந்து நிமிஷம் கரைந்து விட்டது. மீதியுள்ள நூத்தி ஐந்து நிமிடங்களில் நீங்கள் இலக்கைத் தொட்டு அதிரடி நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். பயணிகளின் உயிர்க்கு சேதம் நேராமல் சாம்ராட்டின் எந்த பாகத்திற்கும் சேதம் நேராமல் சாம்ராட்டின் எந்த பாகத்திற்கும் சேதம் நேராமல் கடத்தல்காரர்களை

கதவை, நெருங்கி அந்த சிவப்புப் புள்ளிகளையும் தீற்றல்களையும் இடது கையின் ஆட்காட்டி விரலால் தொட்டுப் பார்த்தார்.

பிசுபிசுத்தது.

மண்டைக்கு ஸ்பஷ்டமாய் உறைத்தது.

ரத்தம்.

இன்னும் காய்ந்து போகாத ரத்தம். தங்கராஜின் இருதயத்துக்குள் - ஒரு பல் சக்கரம் பயமாய் சுழன்றது. ஜெகதீஷ் காபின் அறைக்குள் இல்லை. ஆனால்.. காபின் கதவின் மேல் ரத்தத்துளிகள்..? இந்த ரத்தம் யாருடையது..?

வாக்கி டாக்கியை எடுத்து பட்டனைத் தட்டி உடனே ராம் சின்ஹாவை தொடர்பு கொண்டார்.

"சின்ஹா.."

"ஸார்.."

"நீங்க உடனே காபினுக்கு வாங்க.."

"எஸ்.. ஸார்"

"வரும்போது..?"

"சொல்லுங்க... ஸார்.."

"ஜெகதீஷ் பர்ஸ்ட் டெக்கிலேயோ.. செகண்ட் டெக்கிலேயோ... இருக்கா ரான்னு பார்த்துட்டு வந்துடுங்க.."

"ஏன்... ஸார்... ஜெகதீஷ் காபின்ல இல்லையா..?"

"இல்லை.."

"நான் ரெண்டு டெக்கிலேயும் பார்த்துட்டு.. காபினுக்கு வர்றேன் ஸார்.."



வாக்கி டாக்கியை அணைத்துவிட்டு காத்திருந்தார் தங்கராஜ். காத்திருந்த நேரத்தில் மறுபடியும் - அந்த சிவப்பு தீற்றல்களை தொட்டுப் பார்த்தார். நான் ரத்தம் தான் என்று அது சத்தியம் செய்தது.

ராம்சின்ஹா முரட்டுமான ஏ.கே. 47 ஐ சுமந்து கொண்டு வந்தார். சொன்னார்.

"ஸார்! ஜெகதீஷை எந்த டெக்கிலேயும் காணோம்.."

"திடீர்ன்னு இவர் எங்கே போனார்ன்னு தெரியலையே.. சின்ஹா! இங்க பாருங்க இது ரத்தம் தானே..?"

தொட்டுப் பார்த்த சின்ஹாவின் முகம் இருட்டுக்குள் விழுந்தது. "ஆமா... ஸார்.. இது 'ப்ளட்' ஸ்டெய்ன்தான்...! எப்படி வந்தது.."

"அதான் தெரியலை... ஜெகதீஷையும் காணாததினாலே..குழப்பமா இருக்கு.."

"ஜெகதீஷை மத்த ரூம்கள்ல தேடிப் பார்த்திங்களா ஸார்."

"இன்னும் இல்லை..."

வயர்லெஸ் கூப்பிட்டது.

தங்கராஜ் சின்ஹாவைப் பார்த்தார். "மெட்ராஸ். கோஸ்ட் கார்ட்ன்னு நினைக்கிறேன். அட்டெண்ட் பண்ணுங்க சின்ஹா.. மறக்காமே குரலை மாத்தி பேசுங்க.."

சின்ஹா தலையாட்டிக் கொண்டே போய் ஹெட்போனை தலையில் மாட்டிக்

உயிரோடு பிடிக்க வேண்டும்..."

காப்டன் ராகுல் அட்டென்ஷனில் நின்றபடி சொன்னார். "கண்டிப்பாய் இந்த அதிரடி நடவடிக்கையை.. வெற்றிகரமாய் முடிப்போம். ஸார்.."

"இந்திய கப்பற்படை உங்கள் இருவரின் மேலும் நம்பிக்கை வைத்து ஐஎஸ்எஸ். சக்ராவில் அனுப்புகிறது. இதன் வெற்றியில் தான் உங்களுடைய பதவி உயர்வுகள் அடங்கியிருக்கின்றன.."

கமாண்டர் பாலச்சந்திரன் குறுக்கிட்டு கேட்டார். "கடத்தல் காரர்கள் மொத்தம் எத்தனை பேர். ஸார்..?"

"நான்கு பேர் என்று தகவல் வந்திருக்கிறது. அந்த எண்ணிக்கையை காட்டிலும் அதிகமாய் இருக்கலாம்.."

"கடத்தல்காரர்களை உயிரோடு பிடிக்க வேண்டியது அவசியமா ஸார்?"

"முயற்சியுங்கள்... முடியாவிட்டால் சுட்டுத் தள்ளுங்கள்.. கப்பலின் காப்டன் தங்கராஜை தொடர்பு கொள்ளுங்கள்... அவர் உங்களுக்கு உதவுவார்." - சொன்ன ரியர் அட்மிரல் எழுந்து நின்று இருவரிடமும் கை குலுக்கினார்.

"விஷ் யூ.. ஆல்.. த.. பெஸ்ட்.. அடுத்த இரண்டு மணி நேரம் கழித்து உங்களிடமிருந்து... நல்ல ரிசல்ட்டை எதிர்பார்க்கிறோம்.."

இருவரும் வெளியே வந்தார்கள்.

போர்ட்டில் நடந்து இருட்டுக் கடலில் நின்றிருந்த ஐ.என்.எஸ். சக்ரா



சப்மெரீனுக்கு - ஸ்டீம் போட். மூலம் பயணித்து நெருங்கினார்கள். அதிரடிப்படை ப்ளீட்டில் காத்திருந்து - சல்யூட் செய்தது.

"எவ்ரிபடி.. ரெடி.."

"ரெடி.. ஸார்.."

"ஷேல்.. வீ.. ஸ்டார்ட்..?"

"எஸ்.. ஸார்.."

ஐ.என்.எஸ். சக்ராவின் இயக்கப் பகுதிக்குள், ராகுலும், பாலச் சந்தரனும் நுழைந்தார்கள்.

அடுத்த சில நிமிஷங்களில் -

சப்மெரீன் கடலுக்குள் மூழ்கி - பெரிஸ்கோப்பை மட்டும் கடல் மட்டத்திற்கு மேல் நீட்டிக் கொண்டு வேகமாய் நீரைக் கிழித்தது.

* * * * *




**A SHIPS ENGINE ROOM CONTANS 1. MAIN CONTROL ROOM 2. THREE BOILERS 3. TURBINE CONTROL ROOM 4. TWO TURBINE ENGINES 5. AFT MACHINARY ROOM.**

தங்கராஜின் கண்கள் - காபின் கதவு மேல் அதிர்ச்சியாய் நிலைத்து நின்றது.

என்ன அது..?

சிவப்பு சிவப்பாய் புள்ளிகள்? திற்றல்கள்..?

கொண்டு மைக்கின் மேல் கர்ச்சிப்பை போர்த்துக் கொண்டு குரலில் கரகரப்பை ஏற்றிக் கொண்டு ஏற்ற இறக்கங்களோடு பேசினார்.

"திஸ்.. ஈஸ்.. ஷிப் ஸாம்ராட்.."

"இது கோஸ்ட் கார்ட் நேவியேஷன்.."

"என்ன..?"

"உங்கள் கோரிக்கை நிறைவேற்றப்பட உள்ளன.."

"மோடி விடுதலை செய்யப்பட வேண்டும்... அதுதான் எங்களுடைய முக்கியமான கோரிக்கை.."

"மோடி இன்னும் ஒன்றரைமணி நேரத்தில் விடுதலை செய்யப்படுவார்.. ஆனால் அந்த அவகாசம் வரைக்கும் பயணிகளுக்கோ கப்பல் ஊழியர் களுக்கோ... எந்தவிதமான ஆபத்தும் நேரிட்டுவிடக்கூடாது.."

"நேராது.."

"உறுதியாக நம்பலாமா?"

"நம்பலாம்.. ஆனால்.. எங்கள் நான்கு பேரை எந்தப் பயணியாவது.. எந்த கப்பல் ஊழியவராவது தாக்கினால்... நாங்கள் எரிமலைகளாகி விடுவோம். அத்தனை பேரையும் சுட்டு கடலில் தள்ளுவோம்... உங்கள் கப்பல் காப்டன் பக்கத்தில்தான் இருக்கிறார்.. அவருக்கு புத்திமதி கூறுங் கள்.. காப்டனோடு நீங்கள் அரை நிமிஷ நேரம் பேசலாம்.." சொன்ன சின்ஹா தன் தலையிலிருந்த ஹெட்போனை கழற்றி



தங்கராஜின் தலையில் மாட்டிவிட்டு மைக்கை நீட்டினான்.

தங்கராஜ் தளர்ந்த குரலில் பேசினார்.

"ஸார்.. வீ... ஆர்.. இன் ட்ரபுள்.."

"டோன்ட் அப்செட்... மிஸ்டர் காப்டன்... கடத்தல்காரர்களின் கோரிக் கைகளை நிறைவேற்ற எல்லா ஏற்பாடுகளை யும் செய்து கொண்டிருக்கிறோம்... விரைவில் ஷிப் ஸாம்ராட் அவர்களிட மிருந்து மீட்கப்படும்.."

"ஸார்! பயணிகளில்... இருபத்தி மூன்று பேரை கொன்றுவிட்டார்கள்... அவர்கள்... கொடுத்துள்ள அவகாசத்திற் குள் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வில்லையென்றால்... மற்றவர்களையும் கொல்ல அவர்கள் தயங்க மாட்டார்கள்.."

"பய்ணிகளும், கப்பல் ஊழியர்களும் பொறுமையாக நிதானம் இழக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டியது உங்கள் கடமை.."

"எஸ்.. ஸார்.."

வயர்லெஸ்ஸை அணைத்தார் தங்கராஜ். வியர்த்த முகமாய் ராம் சின்ஹாவை ஏறிட்டார்.

"சின்ஹா.."

"ஸார்.."

"நம்முடைய அடுத்த கட்ட திட்டத்தை உடனே அமுலுக்கு கொண்டு வரணும்... கப்பலோட வேகத்தை

அதிகப்படுத்தி - உடனே ஐவரி ஐலேண்ட்டுக்கு போய் தங்கத்தையும் கைப்பற்றிய போதை மருந்துகளையும் அங்கே காத்திருக்கிற நம்ம கூட்டாளி தோஷிரெண்கிட்டே ஒப்படைக்கணும்.. கப்பல் ஐவரி ஐலேண்ட்டை தொடறதுக்குள்ளே பாஸஞ்சர்களில் ஒரு நாலு இளைஞர்களை செலக்ட் பண்ணி கடத்தல்காரர்களா உருவகப்படுத்தணும்.

"புரியுது ஸார்....விடியற்காலையில் கொண்டு வர இருந்த திட்டத்தோட கிளைமாக்ஸை இப்பவே.. கொண்டு வர்றோம். இன்னும் அரைமணி நேரத்துக்குள்ளே இந்த ஷிப்பில் இருக்கிற பாஸஞ்சர்களையும் பனிரெண்டு ஷிப் ஊழியர்களையும் சுட்டுத் தள்ளி.. கடலுக்குள் வீசுகிறோம். கடத்தல்காரர்களாக உருவகப்படுத்தியுள்ள நாலு பேரை மட்டும் கடைசியா சுட்டு கொன்று... டெக்கிலேயே.. போட்டுட்டு.. மெட்ராஸ் கோஸ்ட் கார்டுக்கு வயர்லெஸ் மூலமா.." பயணிகளையும், ஷிப் ஊழியர்களையும் வெறித்தனமா பலி வாங்கின அந்த கடத்தல் பேர்வழிகள் நாலு பேரையும் சுட்டு கொன்னுட்டோம்.. உடனே ரெஸ்க்யூ ஷிப்பை அனுப்புங்கன்னு சொல்லப் போறோம்.. அவ்வளவுதானே?"

"அதே தான்.."

"ஜெகதீஷ் இப்ப எங்கேன்னு தெரியலையே ஸார்?"

"ஒவ்வொரு ரூமா... தேடிப்



பார்த்துடலாமா.."

"ம்... நீங்க... ஷிப்போட ஃப்ரண்ட் போர்ஷனிலிருந்து.. பார்த்துட்டு வாங்க.. ஸார்! நான். ஸகண்ட் போர்ஷனிலிருந்து.. பார்த்துட்டு வர்றேன்.."

தலையாட்டினார் தங்கராஜ்.

* * * * *



## 16



**THE FIRST OCEAN - GOING MODERN SHIP IN INDIA WAS LAUNCHED IN 1948 BY PANDIT JAWAHARLAL NEHRU. THE LAUNCHING SITE WAS THE SCINDIA SHIP BUILDING YARD IN VISHAKAPATNAM: SHE WAS A GENERAL CARGO STEAMSHIP OF 8OOO DW TONS AND WAS EMPLOYED IN COASTAL TRADE.**

ஐ.எஸ்.எஸ். சக்ரா சம்மெரீன் கடலுக்கு கீழே ஒரு புல்லட் மாதிரி பாய்ந்து கொண்டிருந்தது. காப்டன் ராகுலும், கமாண்டர் பாலச்சந்திரனும் உருண்டை நாற்காலிகளில் உட்கார்ந்து எதிரேயிருந்த பச்சை நிற ராடார் திரையையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். ராடார் ரேஞ்சுக்குள் சாம்ராட் வராததல் திரையில் வெளிச்சப் புள்ளிகள் உற்பத்தியாகி அந்தக் கணமே மறைத்து கொண்டிருந்தது.

"எத்தனை கிலோ மீட்டர் வந்திருக்கிறோம்..?"

"இருபது."

"ராடார் ரேன்ஜ் , கிடைக்க இன்னமும்.. பத்து கிலோ மீட்டர் போக வேண்டும்.."

சீஃப் நேவல் கமாண்டிலிருந்து ரேடியோ சிக்னல்கள் இடைவிடாமல் வந்து கொண்டிருந்தன. வயர்லெஸ் மேலிருந்து பீக்... பீக்... சத்தமும் இடை இடையே கட்டளைக் குரல்களும் வந்தன.

ராகுலும், பாலசந்திரனும் ரேடார் திரையையே பார்த்துக் கொண்டிருக்க பதினைந்து நிமிஷம் கழித்து.

திரையில் அந்த ஒளிப் புள்ளி தோன்றியது.

"காப்டன்.. வீ.. காட்... இட்.."

"அது ஷிப் சாம்ராட் தானா..?"

"ஷ்யூர்... தென் கிழக்காய் நாற்பது டிகிரி கோணத்தில் . ஷிப் தட்டுப்பட்டிருக்கிறது.. அது சாம்ராட்தான்.."

"ஷிப்பை நம் சப்மெரீன் நெருங்க.. எப்படியும் அரைமணி நேரமாகிவிடும்.. அந்த அரை மணி நேரத்திற்குள் நம்முடைய சப்மெரின் சாம்ராட்டின் ராடார் ஆன்டெனாவுக்கு கிடைக்காமல் இருக்க வேண்டும்.."

"அவர்களுடைய ராடார் திரைக்கு நாம் சிக்க மாட்டோம்."

"சிக்காதவரைக்கும் நமக்கு ஆபத்தில்லை."

* * * * *





## 17

**THE BRIDGE OF A MODERN OCEAN LINER HAS HIGH ACCURATE NAVIGATION EQUIPMENT FOR .......... THE SHIP AND KEEPING IT SAFELY**

தங்காராஜ் ஒவ்வொரு அறையாய் புகுந்து வெளிப்பட்டார். வீல் ஹவுஸ், நேவிகேஷன் ரூம், வயர்லெஸ் ரூம், ஸ்டாஃப் ஸ்டீவர்ட்ஸ் ரூம்... க்ருமென் வெஸல்ஸ்..

எங்கேயும் ஜெகதீஷ் இல்லை.

"ஜெகதீஷுக்கு என்னாயிற்று?"

தங்கராஜின் வயிற்று தசைகளை ஒரு பயம் கவ்வி பிடித்தது. காபின் கதவில் பார்த்த ரத்தம் கண்ணின் பார்வைகளிலேயே இன்னும் உட்கார்ந்திருந்தது.

'ஜெகதீஷை யார் தாக்கியிருப்பார்கள்..?"

"எல்லா பயணிகளும், க்ருமென்னும்.. டெக்குகளில் இருக்கும்போது.. யார் வந்து தாக்கியிருக்க முடியும்.. அப்படியே தாக்கியிருந்தாலும் உடல் காபினுக்குள்ளேயே விழுந்திருக்க வேண்டும்.."

யோசித்துக் கொண்டே டெக்கின் முதல் தளத்திதுக்கு வர ஷ்யாம்லால் மெஷின் கன்னோடு எதிர்பட்டான்.

"ஸார்! நிறுத்தப்பட்டிருக்கும் அந்த எட்டு பாஸஞ்சர்ஸை சுட்டு விடலாமா?"

"ஷ்யாம்லால்.. ஒரு சின்ன குழப்பம்.."

"என்ன ஸார்..?"

"ஜெகதீஷைக் காணோம்.."

"ஸ.. ஸார்.."

ஷ்யாம்லால் திடுக்கிட்டு கண்களை விரிக்க தங்கராஜ் தொடர்ந்தார். "காபின் கதவில் ப்ளட் ஸ்ட்ரெயின்ஸ் மட்டும் இருக்கு.. ஆளைக் காணோம். நான் ஷிப் போட ஃப்ரண்ட் போர்ஷன் பூராவையும் பார்த்துட்டேன். கைண்ட் போர்ஷனைப் பார்க்க ராம் சின்ஹா போயிருக்கார்.."

"நானும்போய் தேடிப் பார்க்கட்டுமா?"

"ப்ளீஸ்.."

ஷ்யாம்லாலிடம் தங்கராஜ் "நீங்க.. போய்.. வந்ததும்.. இந்த எட்டு பேர்களையும்.. கடலாம். இந்த எட்டுப் பேரை மட்டுமல்ல.. கீழே இருக்கிற எண்பது பேரையும் கட்டுத்தள்ள வேண்டியதுதான்.."

ஷ்யாம்லால் - டெக்கினின்றும் கீழே இறங்கி வந்தார். சற்று இருட்டான ஃபோர் கோஸ்டல் பிளாட்பாரம் வர அதன் மேல் ஜாக்கிரதையாய் நடந்து ஏன்க்கர் கேபினுக்குள் நுழைந்தார்.

"யாருமில்லை.."

"அடுத்தபடியாக இருந்த ஸ்டார்ஃபோர்ட் காபினுக்குள் எட்டிப் பார்த்தார். வெண்டிலேட்டர் வழியே கடல்காற்று மட்டும் வேகமாய் வீசியது.

ஷ்யாம்லாலின் மனக்குள் யோசனை



ஓடியது.

ஜெகதீஷ் பெண்கள் விஷயத்தில் பலவீனமானவன்.. பயணிகளில் அழகாய் இருந்த எந்தப் பெண்ணையாவது.. ஒதுக் குப் புறமான வாஸலுக்குக் கூட்டிப் போய் அவளை பாழ்படுத்திக் கொண்டிருக்கி றானோ.. என்னவோ..?"

'வெஸல்ஸ் பக்கமாய் போய் பார்க்கலாமா..?'

எண்ணி திரும்பிய விநாடி -

இருட்டில் இருந்த அந்த ஏன்க்க கேபினுக்கு பக்கத்தில் மசமசப்பா இருட்டில் யாரோ குப்புற விழுந் கிடப்பது தெரிந்தது.

இருதயம் ஒருபக்கமாய் உதைத்து கொள்ள ஷ்யாம்லால் வேக நடையி நெருங்கி மண்டியிட்டு உட்கார்ந்து குப்பு கிடந்தவரை மல்லாத்தினார்.

நிலைத்த கண்களோடு -

கடைவாயோரம் வழிந்த ரத்தத்தோ

ரர்ம் சின்ஹா அப்போதுதான் கட கட்ச் செத்திருந்தார்.

* * * * *



## 18



IF THE SHIP STRIKES A ROCK AND THE OUT COVERING IS PUNCTURED. THE INNER BOTT

**ILL KEEP IT AFLOAT. ENDANGERING NEITHER ASSERGERS NOR CARGO.**

ஐ.என்.எஸ். சக்ரா சப்மெரீன் - ாடார் திரையில் ஷிப் சாம்ராட் ஒரு ள்ளியாய் தெரிந்து சிறிது சிறிதாய் பரிதாகிக் கொண்டே வந்தது.

காப்டன் ராகுல், க்ரோனோர் ட்டரை பார்த்துக் கொண்டே சான்னார். "இன்னும் முப்பது கிலோ ட்டர் தூரம்தான்."

"எந்த திசையில் நெருங்கலாம் ாப்டன்?"

"கிழக்காய் சென்று - பின் தன்திசையில் திருப்பி சாம்ராட் நூறு டி தூரத்தில் இருக்கும்போது நம் ்மெரீன் சட்டென்று வெளிப்பட வண்டும். அதிரடி வீரர்கள் 'லைஃப் ாட்களில் தாவி பத்து விநாடிகளுக்குள் ம்ராட்டை தொட வேண்டும்."

"வீரர்கள் பெட்ரோலில் நனைத்த ந்சுபோல எந்த விநாடியும் தீப்பற்றிக் காள்ளக் கூடிய... வேகத்தில். இருக் ார்கள்... காப்டன்..." பாலசந்திரன் சால்லிக் கொண்டிருக்கும்போதே சதர்ன் வல் காமாண்ட் வயர்லெஸ்ஸில் பிட்டார்கள்.

"காப்டன்..."

"எஸ்... ஐஎன்எஸ்... சக்ரா."

"ராடார் திரை என்ன சொல்கிறது..."

"ஷிப் சாம்ராட்டை பார்த்துக் ாண்டிருக்கிறோம்..."



"சாம்ராட்டிலிருந்து எவ்வள தொலைவில் இருக்கிறீர்கள்...?"

"இருபத்தெட்டு கிலோ மீட்டர்."

"சக்ரா... சாம்ராட்டை நெருங்கியது - அதிரடி தாக்குதல் புத்திசாலித்தனமா நடத்தப்பட வேண்டும்... சிறிது கவன குறைவு ஏற்பட்டாலும்... எடுக்கப்பட் முயற்சிகள் வீணாகி விடும்."

"தெரியும்... கவனமாக செயல்ப வோம்."

"கப்பலை காப்பது ரெண்டா பட்சம்... முதலில் பயணிகள்."

"ஒரு பயணி கூட உயிரிழக்காம பார்த்துக் கொள்வோம்..." வயர்லெ பேச்சு தொடர்ந்து கொண்டிருக்க - சக் கடலுக்கடியில் நீரை கிழித்து கொண்டிருந்தது.

* * * * *

## 19



**INDIA'S SEA-COAST, FROM LAKPAT IN GUJAR TO CALCUTTA IN WEST BENGAL, HAS BE LARGELY RESPONSIBLE FOR MAKING IT ONE THE WORLD'S LEADING SHIP OWNERS.**

ராம் சின்ஹா கழுத்து நெரிபட் இறந்து போயிருக்கிறார் என்பது கண்களின் பிதுக்கத்திலிருந்து தெரிந்த

ஷ்யாம்லால் வியர்த்துக் கொண்

மெல்ல எழுந்தார். இருதயம் வேகமான 'தடக் தடக்'கில் இருந்தது.

ராம் சின்ஹாவை யார் இப்படி...?"

மூளைப் பிரதேசம் நடுக்கமாய் யோசித்துக் கொண்டிருக்கும்போதே -

அந்த சத்தம் கேட்டது.

காலடிச் சத்தம்.

கண்களில் பீதி ஈஷிக் கொள்ள ஷ்யாம்லால் சுற்றும் முற்றும் பார்த்தார். சத்தம் எந்த திசையில் வருகிறது என்று அனுமானிக்க முடியாமல் திணறினார்.

"த்தம்... த்தம்..."

காலடிச் சத்தம் அவரை நெருங்கியது.

"இடது பக்கமா..? வலது பக்கமா..?"

யூகிப்பதற்குள் -

இருட்டின் மறைவிலிருந்து வெளிப் பட்ட அந்த உருவம் ஷ்யாம்லாலின் மேல் பாய்ந்து வாயைப் பொத்தியது இடது கை கழுத்தை வளைத்தது.

ஷ்யாம்லால் திமிர முயன்று கிடைத்த ஒரு விநாடி அவகாசத்தில் கத்தினார். "கா...ப்...ப...ன்..."

மறுமுறை கத்த முயல்வதற்குள் - கழுத்து ஒரு பக்கமாய் திருப்பப்பட்டு வாயில் ரத்தம் கொட்டினார். உருவத்தின் அடிகளில் துவண்டார்.

★ ★ ★ ★ ★






**HOW DEEP IS THE OCEAN? THE ECHO - SOUNDER, WHICH INDICATES WHAT DEPTH OF WATER LIES BENEATH THE VESSEL, IS ESSENTIAL FOR COASTAL AND SHALLOW WATER NAVIGATION.**

**ரா**டார் திரையில் -

ஷிப் சாம்ராட் பெரிதான வெளிச்சப் புள்ளியாய் தெரிந்தது. அதிரடி வீரர்களோடு பேசினார் காப்டன் ராகுல்.

"பத்து கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறோம். இன்னும் எட்டு நிமிடங் களில் ஷிப்பை நூறடி தொலைவில் நெருங்கி விடுவோம்... எல்லோருமே ஆயத்த நிலையில் இருக்கிறீர்களா..?"

"இருக்கிறோம்... உங்கள் உத்தரவு கிடைத்ததுமே லைஃப் போட்களில் பா வேண்டியதுதான்..."

"தாக்குதல் நடத்த வேண்டிய கட்ட களை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள் மூர்க்கத்தனமும் புத்திசாலித்தனமும் ஒ விநாடியில் இணைத்து செயல்ப வேண்டும்.

"அதிரடி தாக்குதலை அற்புதமா செயல்படுத்துவோம்..."

"நம் சக்ரா" இப்போது தென்தி யில் திரும்பி மறுபடியும் தென்கிழக்கா ஷிப் ஸாம்ராட்டை நோக்கி செல்லும்.

சக்ரா கம்ப்யூட்டர் கட்டளைக்கு கட்டுப்பட்டு எலக்ட்ரானிக் பாஷையில் பேசிக் கொண்டு திரும்பியது.

* * * * *



## 21

**THE BIGGEST IN OUR MERCHANT FLEET IS THE KANCHEN - JUNGA WHICH HAS A DEAD WIEGHT CAPACITY OF 2,73,000 TONS. TODAY WE HAVE MORE THAN 600 SHIPS ENGAGED IN COASTAL AND FOREIGN TRADE.**

"**கா**ப்டன்.."

என்ற ஷ்யாம்லாவின் அலறல் சத்தம்.. அந்த நடுநிசி வேளையில் முதல் டெக்கில் இருந்த ஹரி சாஸ்திரிக்கு கேட்க அவர் திடுக்கிட்டு வாக்கி டாக்கியை எடுத்து மேல் டெக்கில் இருந்த காப்டனிடம் தொடர்பு கொண்டார்.

"ஸார்..! கீழே பைண்ட் போர்ஷனில்.. ஏதோ அலறல் சத்தம்.. அது அநேகமாய் ஷ்யாம்லாவின் குரல் மாதிரி இருந்தது.."

"ஹரி! நீங்கள் அங்கேயே இருங்கள்.. நான் இங்கே இருக்கும் எட்டு பேரையும்.. ஷிப் மேன் பன்னிரெண்டு பேரையும்... கூட்டிக் கொண்டு கீழே வருகிறேன்.. இந்த ஷிப்பில் நமக்குத் தெரியாமல் எதுவோ நடக்கிறது.."

சொன்ன தங்கராஜ் வாக்கி டாக்கியை அணைத்து விட்டு டெக்கில் இருந்த



இருபது பேரையும் மெஷின் கன்னின் உதவியால் கீழே இறக்கிக் கொண்டு வந்து மற்றவர்களோடு சேர்ந்து மண்டியிட வைத்தார்.

"ஹரி..."

"ஸார்..."

"நீங்கள் அங்கேயே இருங்கள்.. நான் ரேடார் காபினுக்கு போய்... ப்ளீட் ஏதாவது வருகிறதாவென்று பார்த்து விட்டு வருகிறேன்.. நமக்கு தெரியாமல் இந்தியக் கப்பற்படை ஏதாவது விஷமமான காரியத்தை பண்ணியிருக்கலாம்.."

"ஸார்! ஷ்யாம்லாவின் அலறல் சத்தம்.. கீழேயிருந்து கேட்டது.."

"அதை வந்து பார்க்கிறேன்.."

தங்கராஜ் ரேடார் கேபினுக்கு ஓடினார். ஹரி சாஸ்திரி ஏ.கே.47 ஐ வசதியாய் ஏற்றிக் கொண்டு எதிரில் வரிசை வரிசையாய் மண்டியிட்டு உட்கார்ந்து முதுகுகளைக் காட்டிக் கொண்டிருந்தவர்களைப் பார்த்து உறுமினான்.

"யாரும் இருக்கிற இடத்தை விட்டு அசையக் கூடாது. யார் அசைந்தாலும் சரி.. அந்த வரிசையில் இருக்கிற எல்லாருடைய முதுகிலும் தோட்டாக்கள் பாயும்.."

மண்டியிட்டு அமர்ந்திருந்த மனித வரிசைகளில் கடுமையான நிசப்தம்.

சில விநாடிகளுக்குப் பிறகு -

தங்கராஜ் வேகமான நடையில் வந்தார்.

"ஹரி.." குரலில் பதட்டம்.

"ஸார்."

பயக்குரலில் கிசுகிசுத்தார். "ரேடார் திரையில் சப் மெரீன் மூவ்மெண்ட் தெரிகிறது..."

ஹரி சாஸ்திரி அதிர்ந்தார்.

"மை குட்னஸ்..."

"சப்மெரீன் எப்படியும் நம் ஷிப்பைத் தொட... சில நிமிடங்களாகும். அதற்குள் அனைவரையும் சுட்டுத் தள்ள வேண்டும்.. சப்மெரீன் ரெஸ்க்யூ நடவடிக்கைகளை எடுப்பதற்குள் நாமே அந்த கடத்தல் காரர்களை கொன்று விட்டதாக வரும் அதிகாரிகளிடம் சொல்ல வேண்டும்..."

"ஸார்! ஜெகதீஷ், ஷ்யாம்லால், ராம் சின்ஹா... இவர்கள் மூன்று பேரும் என்ன ஆனார்கள் என்று தெரியவில்லை... ஷ்யாம்லாலின் அலறல் சத்தம் கீழேயிருந்து கேட்டது..."

"நான் போய் பார்த்துவிட்டு வந்து விடட்டுமா...?"

"சீக்கிரம் வாருங்கள் காப்டன்...! நடக்கிற சம்பவங்கள் எனக்கு ஒரே உதறலாக இருக்கிறது..."

"ஹரி! பயப்படாதீர்கள்... பயணிகள் நம் பணயக் கைதிகளாக இருக்கிறார்கள்... உங்கள் கையிலும் என் கையிலும் ஏ.கே. 47 இருக்கிறது... நமக்கு ஏதாவது ஆபத்து வருகிற பட்சத்தில் : அத்தனை பேரையும் துவம்சம் செய்துவிடலாம்..."

தங்கராஜ் கீழே குதித்து ஓடினார்.



மூச்சிரைத்தது.

ஃப்ரெண்ட் பிளாட்பாரத்துக்கு வந்ததும் இருட்டான கேபின்களைப் பார்த்து கத்தினார். "ஷ்யாம்லால்..."

"..."

"ராம் சின்ஹா..."

கீழ்தளத்தில் அமோக நிசப்தம்.

"என்ன ஆனார்கள் இரண்டு பேரும்...?"

"மறுபடியும் குரல் கொடுத்தார். "ஷ்யாம்லால்! ராம் சின்ஹா..."

"மௌனம்.

"உள்ளே போகலாமா...?"

"வேண்டாம்... ஏதோ... ஆபத்து..."

உள்ளுணர்வு எச்சரித்த அதே விநாடியில் -

அந்த காலடிச் சத்தம் கேட்டது.

'த்தம்... த்தம்..."

தங்கராஜின் உடம்பிலிருந்த மில்லியன் கணக்கான செல்கள் போர்க் கவசம் பூண்டன. ஏ.கே. 47ஐ தயார் நிலைக்கு கொண்டு வந்தார்.

"யா... யாரது..."

மெல்ல குரல் கொடுத்துக் கொண்டே பின் வாங்கினார். யூனிஃபார்ம் வியர்வையில் ஊறியது. காலடிச் சத்தம் இப்போது தெளிவாய் கேட்டது.

'எந்தப் பக்கம்...?'

தங்கராஜ் கண்டுபிடிக்க திணறிக் கொண்டிருக்கும்போதே அந்த உருவம் திடும்மென்று மேலே வந்து விழுந்து ஏ.கே. 47ஐத் தட்டிவிட்டு அது இருட்டில் எகிறி கீழே வந்து விழுவதற்குள் கையில் ஏந்திக் கொண்டது.

தங்கராஜ் திடுக்கிட்டு நிமிர

எதிரே

சரண் மாத்தூர்.

இண்டர் நேஷ்னல் ஸ்விம்மர்!

★ ★ ★ ★ ★



## 22

SHIP OF THE INDIAN FLEET; 1. AIRCRAFT CARRIER INS VIKRANT INS VIRAT. 2. CRUISERS INS MYSORE A COLONY. 3. DESTROYERS INS RAJPUT. RANJIT, GOMATHI, GODAVARI AND GANGA, 4. SUB MARINES KHANDARI, KARANJI, KUR SURAR.

தங்கராஜ் கண்கள் நிலை குத்தினார்.

"நீ.. நீ..?"

"சரண் மாத்தூர்.. இண்டர் நேஷ்னல் ஸ்விம்மர்.." அவன் ஏ.கே. 47ன் மூக்கால் தன் கன்னத்தை சொறிந்து கொண்டே புன்னகைத்தான்.

"உ.. உன்னை சு.. சுட்டு.. கடலில்.."

"ஸாரி.. காப்டன்! நான் சாகலை.. நான் சாகாததற்கு காரணம் மந்திரமோ



தந்திரமோ இல்லை.. இந்த புல்லட் ப்ரூப் ஜாக்கெட்தான்.." சொன்னவன் தன் ஜெர்கின் கோட் ஜிப்பை விலக்கி தன் நெஞ்சை அடைகாத்த அந்த புல்லட் ப்ரூப் ஜாக்கெட்டைக் காட்டிவிட்டு தொடர்ந்தான். "கடந்த ஆறுமாத காலமாவே என்னோட ப்ரொபஷனில் எனக்கு எதிரிகள் அதிகம். ஒரு தடவை என்னை டில்லியில் சுட்டுக் கொல்ல முயற்சியும் நடந்தது. அதுக்கப்புறம்தான்.. ரெகுலரா.... குண்டு துளைக்காத இந்த புல்லட் புரூப் ஜாக்கெட்டை அணிய ஆரம்பிச்சேன். மெஷின் கன்னால உங்க ஆள் என்னை சுட்டப்ப. செத்து விழுந்த நபர்களோடு நானும் செத்த மாதிரி விழுந்தேன். எனக்கு மூச்சை அடக்கிக்கிற பயிற்சியும் உண்டு. செத்தவங்களை எடுத்து கடலில் எறியறப்போ நான் மூச்சை அடக்கிக்கிட்டு நான் செத்தவன் மாதிரி கிடந்தேன். என்மேல இருந்த ரத்தம் மத்தவங்களோட ரத்தம்தான்."

சரண் மாத்தூர் சில விநாடி பேச்சை நிறுத்தி மறுபடியும் தொடர்ந்தான். "கடலில் நான் தூக்கி வீசப்பட்டதும்.. அரைமணி நேரம் நீந்தி.. இந்த கப்பலோட பின்பக்கத்து பிடிமானங்களை பற்றி ஏறி உள்ளே வந்தேன். கீழ் தளத்து இருட்டில் என்னை கரைச்சுகிட்டே.. உங்க ஆட்கள்ல ஒவ்வொருத்தரையா தீர்த்து கட்டினேன். மொதல்ல ஜெகதீஷ்.. காபின் ரூமிலேயே கதையை முடிச்சு.. கடல்ல தூக்கி எறிந்தேன். ரெண்டாவது பலி ராம் சின்ஹா.. மூணாவது ஷ்யாம்லால்.. இந்தக் கொலைகளை செய்ய எனக்கு உடன்பாடு

இல்லைதான்.. ஆனாலும் பாஸஞ்சர்ஸைக் காப்பாத்த எனக்கு வேற வழி தெலியலை. இது ஒரு வகையான போர்... போரில் எதிரிகளை கொல்றது கொலையில்லை..."

தங்கராஜ் சரண் மாத்தூரின் கையிலிருந்து ஏ.கே. 47ஐயப் பார்த்துக் கொண்டே குரல் நடுங்கச் சொன்னார்.

"எ.. என்னை சுட்டுடாதே.."

"உன்னைச் சுடாமே இருக்கணும்ன்னா... நீ ஒரு காரியம் பண்ணனும்! உன் பாக்கெட்ல இருக்கிறது வாக்கி டாக்கி தானே..?"

"ஆ.. ஆமா.."

"அதை எடுத்து ஹரி சாஸ்திரி கிட்டே பேசு.. அவன் கையில் இருக்கிற ஏ.கே. 47ஐ கடல்ல தூக்கி எறியச் சொல்லு.."

தங்கராஜ் தயங்கினார்.

"ம்.. சொல்லு.. இல்லேன்னா... உன்... உடம்பை சல்லடையாக்கிட்டு உன் சகாவையும் தீர்த்துக் கட்ட என்னால முடியும்.."

வாக்கி டாக்கியை எடுத்தார் தங்கராஜ். பட்டனைத் தட்டிவிட்டு பேசினார். "ஹரி... கையில் இருக்கிற மெஷின் கன்னை.. கடல்ல எறிஞ்சுடுங்க.."

"ஸ..ஸார்.."

"சொன்னதை செய்ங்க! வீ.. ஆர் இன் ட்ரேப்.."

"ஸ..ஸார்.."

"டு.. இட்..ஸே.." தங்கராஜ் எரிச்சலாய் கத்தினார்.

சரண் மாத்தூர் புன்னகைத்து



"அப்படியே இன்னொரு உதவி... ஹரி சாஸ்திரியின் கையில் இருக்கிற வாக்கி டாக்கியை ஒரு பாஸஞ்சர்கிட்டே குடுக்கச் சொல்லு.." என்றான்.

தங்கராஜ் அந்த வாக்கியத்தை சொன்னதும் சரண் மாத்தூர் தங்கராஜின் கையிலிருந்த வாக்கி டாக்கியை வாங்கிக் கொண்டான். பேசினான்.

"டியர்.. பாஸஞ்சர் எதிரில் இருக்கிற ஹரி சாஸ்திரி.. மெஷின் கன்னை கடல்ல வீசிட்டாரா.."

"வீசிட்டார்.."

"குட்...!"

வாக்கி டாக்கியை அணைத்த சரண் மாத்தூர் தங்கராஜின் விலாவில் மெஷின் கன்னை வைத்து தள்ளினான்.

"வாங்க.. இனிமேலே போலாம்.."

அதே விநாடி -

ஐ.என்.எஸ். சக்ராவின் சப்மெரீன் கடல் பரப்பினின்றும் மேலே எழ அதிர வீரர்கள் ஏந்திய துப்பாக்கிகளோடு லைஃப் போட்களில் பாய்ந்தார்கள. ஷிப் சாம்ராட்டை நோக்கி வேகவேகமாய் வர ஆரம்பித்தார்கள்.

* * * * *




**கடவுளின் படைப்பில் பார்க்க பார்க்க அலுத்து போகாதது... கடல் ஒன்றுதான்.**

**பி**றகு வந்த சில நாட்களில் -

ஒருநாள் இரவு 8.40 தமிழ் நியூஸில், சந்தியா ராஜகோபால் தலைப்புச் செய்தியாய் கீழ்க்கண்ட வார்த்தைகளை வாசித்துக் கொண்டிருந்தார்.

"ஷிப் ஸாம்ராட்டில் பயணம் செய்த பயணிகளையும் கப்பல் ஊழியர்களையும் காப்பாற்றி குற்றவாளிகளை துணிச்சலோடு பிடித்து கடற்படையிடம் ஒப்படைத்த தேசிய நீச்சல் வீரர் சரண் மாத்தூர்க்கு பரம்வீர் சக்ரா விருது வழங்கப்பட்டது. சரண் மாத்தூரை குடியரசு தலைவர் பாராட்டி பேசுகையில் அவர் ஒன் மேன் ஆர்மி என்று கூறி புகழாரம் சூட்டினார். அவர் மேலும் கூறுகையில். இளைஞர்கள் இது போல்.."

தமிழ்நாடு பூராவும் இருந்த லட்சக்கணக்கான டி.வி. திரைகளில் சரண் மாத்தூர் சிரித்தார்.

-- முற்றும் --

நிர்வாக அலுவலகம்
**மூன் நாவல்**
சௌகத் மேன்சன், எண்: 2, பிள்ளையார் கோயில் 2வது தெரு. திருவல்லிக்கேணி, சென்னை-5.
Cell: 98841 44205
9 - 7

Published & Printed S.B.Kushal on behalf on Sulekhar Printers, Triplicane, Chennai-600 005.